
# பிரார்த்தனைப் பாடல்கள்

(பஜனை)



ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம், அளவெட்டி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிரார்த்தனைப் பாடல்கள்

# (பஜனை)


ஆக்கியோன் :

கலாநிதி அருட்கவியரசு

**சீ.விநாசித்தம்பிப் புலவர்** *M.A. Ph.D.*

அவர்கள்



பதிப்பாளர்

**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்,**

**நாகேஸ்வரம்,**

**அளவெட்டி.**

**2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பிரார்த்தனைப் பாடல்கள் (பஜனை) |
| ஆசிரியர் | : | கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பி (M.A.Ph.D) |
| முகவரி | : | ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்,<br>நாகேஸ்வரம், அளவெட்டி. |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு | : | முதற்பதிப்பு – 1998<br>இரண்டாம் பதிப்பு – 2005 |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>424, காங்கேசன் துறை சாலை, யாழ்ப்பாணம். |
| பக்கம் | : | i– 138 |
| விலை | : | 150/– |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

**"பாடுவாருக்கு அருளுமெந்தை"** - சம்பந்தர்

**"பாடுவார் பசிதீர்ப்பாய்"** - சுந்தரர்

**"பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி"**

அப்பர்

**"என்புருகிப் பாடுகின்றிலை"** - மணிவாசகர்

**"பாடும் பணியே பணியாய் அருள்வாய்"** -

அருணகிரிசுவாமிகள்

**மெய்யன்பர்களே!**

எம்பெருமானைப் பாட்டினாலே அழைக்கலாம் - காணலாம் அருள்பெறலாம் - பிறவித்துன்பம் நீக்கலாம் என்று மகான்கள் தம் அனுபவங்களை வெளிப்படுத்துகிறார்கள். "இசை வடிவாய் நின்ற நாயகியே" என்கிறார் அபிராமிப்பட்டர்.

"வாயினும் மனத்தும் மருவி நின்றகலாமாண்பினர்" என்பது திருஞானசம்பந்தப் பெருமானின் அருள்வாக்கு

**"பாடுமனமுடைப் பத்தருள்ளீர் வந்து**
**பல்லாண்டு கூறுமினே"**

என்கிறார் பெரியாழ்வார் எனவே, அடியார்கள் பரம்பொருளின் நாமங்களைப் பாடிப் பாடித்துதித்துத்தம் பிறவித் துயரை ஓடச் செய்யலாம் என்ற பெரும் நினைப்புடன் இந்த நூலில், திருவருள் கிடைத்த படி, கிடைத்த பாடல்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியுள்ளேன் அன்பர்கள் - மனனம் செய்து ஆலயங்களிலும் வீடுகளிலும் பாடிவந்தால் எதிர்காலச் செல்வ மக்கள், பக்தி நெறிபிடித்துத் தெய்வீகப்பண்பான சமுதாயத்தை சைவ மார்க்கத்தை வளர்ப்பார்கள் என்பது திண்ணம். பாடல்களில் இடப்பட்ட இராகங்கள் பக்தி நிலையில் பாடும்போது மாறுபடலாம். அவ்வப்போது வருகின்ற வர்ணமெட்டில் பாடலாம் தெய்வநாமங்கள் எல்லாம் வேத அடிப்படையில் அமைந்தவை அந்த நாமங்களை உச்சரிப்பதால் பிராணவாயு - பிராணனை வளர்க்கிறது. எனவே தேவநாமங்ளைப் பலதரம் பாடுவதாலே பிராணன் நீண்டகால வாழ்வைப்பெறும் என்பது வெளிப்படை என்பதை நாம் உணர்வோமாக.

இந்நூல் பிரசுரத்திற்கு அன்பளிப்புச் செய்த 27/08/2005 புதிய தேரில் வீதிவலம் வரும் ஸ்ரீநாகவரத நாராயணப் பெருமானின் திருவடிகளைப் பிரார்த்திக்கும் திரு.இராசையா குகவரதன் (லண்டன்), திரு.குமாரசாமி கருணாமூர்த்தி (லண்டன்) பரராசசேகரப் பிள்ளையார் மணிமண்டபம் (இணுவில்) ஆகியோருக்கும், இந்நூலினை மீள் பதிப்பு செய்து தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது நன்றியைக் கூறி வாழ்த்தி வணங்குகின்றோம்.

**"சைவநெறி தழைத்தோங்குக"**

நாகேஸ்வரம்,
அளவெட்டி,
01.08.1998

**அன்பன்**
**அருட்கவி. சீ. விநாசித்தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. து. வைத்திலிங்கம் அவர்கள்

(யாழ். மேலதிக அரசாங்க அதிபர்)

வழங்கிய

# சிறப்புரை

அளவெட்டி திரு. நாகேஸ்வரப்பதியில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீமத்நாராயண மூர்த்தியின் திருவருளால் அருட்கவியரசு சீ.விநாசித்தம்பி புலவர் அவர்கள் அப்பெருமான் மீது எண்ணற்ற பாடல்களைப் பாடி அவை யாவற்றையும் நூலுருவில் தந்துள்ளார்.

இந்நூலில் கூட்டுப் பிரார்த்தனைப்பாடல்கள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன. பிரார்த்தனை மூலம் நாம் இறைவனின் நல்லருளைப் பெறலாம்.

உள்ளம் தெளிவுற அறிவுரை பக்திவளர கூட்டுப்பிரார்த்தனை உதவுகின்றது. தறிகெட்டுத்திரியும் இளம் உள்ளங்களை இறைவன் பால் ஈடுபடச் செய்யவும் மனம் பக்குவம் அடையவும் இக்கூட்டுப்பிரார்த் தனைப் பாடல்கள் பெரிதும் உதவுகின்றன.

புலவர் அவர்களின் பணி இந்த அளவுக்குப்பெருமை தொக்கு நனி சிறந்து விளங்குவது நாம் செய்த பாக்கியமே.

**து. வைத்திலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை

(யாழ். கல்விவலயம் - பிரதிக்கல்விப்பணிப்பாளர்)

## அவர்கள்

வழங்கிய

# அணிந்துரை

இறைவன் திருவருளை வேண்டிச் செய்யப்படும் ஆராதனைகள் பற்பல. விரதம் அனுட்டித்தல், காவடி கரகம், அங்கப் பிரதிஷ்டை செய்தல், பிரார்த்தனைசெய்தல், பஜனைப் பாடல்களைப்பாடுதல் போன்றன அடியார்களை ஒன்று கூட வைத்துப் பேரின்பப்பேற்றை அடைய வைக்கின்றன.

கதாகாலட்சேபம், வில்லுப்பாட்டு, நாடகம் புராணபடனம் போன்றவை கூட இறைவன் திருவிளையாடல்களை இசைமூலம் எடுத்தியம்புகின்றன. இவை மட்டுமல்ல பூசைவழிபாடுகளில் வேதபாராயணம், பஞ்சபுராணம் ஓதல் ஆலயங்களில் அடியார் கேட்கும் அற்புத சாதனங்களாகும் இசைவாத்தியங்களான மணியோசை, சங்குசேமக் கலம் முரசு போன்றவை பக்தர்களைப் பரவசப்படுத்துகின்றன. சுவாமியின் திருஉலா மற்றும் பூசை வேளைகளில் பிரதானமாக நாதஸ்வரம் தவில் ஆகிய மங்கள வாத்தியங்கள் பல்வேறு இராகதாள விவகாரங்கள் செய்து கிரியைகளையும் வீதி வலத்தையும் உணர்த்துகின்றன.

இவை யாவற்றிலும் பெரும்பாலான அடியார்கள் தங்கள் இறையுணர்வை வெளிப்படுத்துவதில் பெரும்பங்கு கொள்ளச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வன பிரார்த்தனைப் பாடல்களே எனலாம். தாமும் இரசித்து அடியார்களையும் உணர்ந்து பரவசப்படுத்த வல்லதானது பஜனைப் பாடல்களே. கூட்டாக இசைக்கருவிகளான ஆர்மோனியம், மிருதங்கங்கள், உடுக்கு போன்ற கருவிகள் பாடல்களைப் பாடும்போது மென்மேலும் உற்சாகப் படுத்துகின்றன.

இசையைக் கற்கவும் இறைவனைச் சுலபமாகப் பாடவும் உதவுவன, இத்தகைய பஜனைப்பாடல்களே. பாடசாலையில் இசைகற்கும் மாணவர்கூட கலாசாரப் பின்னணியை அறியவும் நயப்புணர்வுடன் செயற்படவும் கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

இவ்வாறான பாடல்களைச் சுலபமான இசையுடனனும் தாளநடையுடனும் பாட ஏற்ற முறையில் அருட்கவி ஐயா அவர்கள் எமது சமுகத்திற்கு ஆக்கித்தந்துள்ளார். முன்கூறிய அத்தனை அம்சங்களும் இதில் இருப்பதால் சைவ அடியார்கள் இதனை மனமுவந்து ஏற்றுக்கொள்வர் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

மேலும் பல பாடல்கள் அவரால் ஆக்கப்பட வேண்டும் அதனை அடியார்கள் ஏற்றிப்போற்றி இறையருளைப் பெற வேண்டும் என நாகவரதநாராயண மூர்த்தியை இறைஞ்சு கின்றேன்.

**சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொருளடக்கம்


| | |
|---|---|
| பஞ்சபுராணம் | 01-03 |
| ஸ்ரீ விநாயகர் | 04-19 |
| சிவபெருமான் | 20-32 |
| அம்பிகை | 33-56 |
| இலட்சுமி | 57-58 |
| சரஸ்வதி | 59-68 |
| ஸ்ரீ நாராயணர் | 69-87 |
| ஸ்ரீ முருகன் | 88-115 |
| வீரபத்திரசுவாமி | 116-117 |
| அரிகரபுத்திரர் | 118-119 |
| ஆஞ்சநேயர் | 120-122 |
| சூரியன் | 123-125 |
| துளசி | 125-126 |
| வைரவர் | 127-129 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## தேவாரம்

பண்: காந்தாரம்

வானமர் திங்களும் நீரும்
மருவிய வார் சடையானை
தேனமர் கொன்றை யினானைத்
தேவர் தொழப் படுவானை
கானம ரும்பிணை புல்கிக்
கலைபயிலுங் கடம் பூரில்
தானமர் கொள்கையினானை
தாள்தொழ வீடெளிதாமே.

சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்வனேன் ஆனேன் படிறுசெய் திருப்பேன்
கண்டவா திரிதந்தே னேலும்
தெள்ளியே னானேன் செல்கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்
உள்ளெலா முருகிக் குரல் தழுத் தொழிந்தேன்
உடம் பெலாம் கண்ணநீர் சோர
நள்ளிருளளவும் பகலும் நான் அழைப்பன்
நாராயணா என்னும் நாமம்

**திருமங்கையாழ்வார்**

## திருவாசகம்

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந்தனையதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழற்றிருச் சடையும்
திவள மாளிகை சூழ் தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என் மனம்
தழல் மெழு கொக்கின்றதே.

**- திருவாலியமுதனார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்
மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டெனும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**- சேந்தனார்.**

## திருப்புராணம்

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார் அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மை யாமெனில் உலகர் முன் வருகென உரைப்பார்.

**- சேக்கிழார்**

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே
காசினியிற் பிறவாதே
சீல அகத் தியஞான
தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே
மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே
நாககிரிப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேழமுகக் கணபதியே

| | | |
|---|---|---|
| வேழமுகக் | கணபதியே | விக்கினேஸ்வரா |
| வினைதீர்க்கும் | குணநிதியே | விக்கினேஸ்வரா |
| ஊழிமுதல் | நாயகனே | விக்கினேஸ்வரா |
| உயிர்க்கெல்லாம் | காவலனே | விக்கினேஸ்வரா |
| ஐம்பத்தோர் | அட்சரனே | விக்கினேஸ்வரா |
| ஆதாரத் | தற்பரனே | விக்கினேஸ்வரா |
| செம்பதும | மேனியனே | விக்கினேஸ்வரா |
| திருமகுட | வேணியனே | விக்கினேஸ்வரா |
| ஐங்கரலம் | போதரனே | விக்கினேஸ்வரா |
| அற்புதகொம் | புடையவனே | விக்கினேஸ்வரா |
| மங்களமா | பாரதத்தை | விக்கினேஸ்வரா |
| மலையெழுதி | வைத்தவனே | விக்கினேஸ்வரா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வன்னியறுகு | மந்தாரை | விக்கினேஸ்வரா |
| மகிழ்ந்தேற்கும் | பிரணவனே | விக்கினேஸ்வரா |
| கன்னிவல்ல | பைகணவா | விக்கினேஸ்வரா |
| கருதுமடி | யார்துணைவா | விக்கினேஸ்வரா |
| | | |
| மோதகத்தைக் | கையிற்கொண்டாய் | விக்கினேஸ்வரா |
| மூஷிகத்தில் | வீற்றிருப்பாய் | விக்கினேஸ்வரா |
| பாதமலர் | அருள்புரிவாய் | விக்கினேஸ்வரா |
| பாடுகின்ற | வரந்தருவாய் | விக்கினேஸ்வரா |

## கணபதி என்றிட வினைதீரும்

| | | |
|---|---|---|
| கணபதி | என்றிட | வினைதீரும் |
| கருதிய | எண்ணெண் | கலைசேரும் |
| அணிபெறு | மானந்தக் | கதிநேரும் |
| ஆன்மா | பக்குவ | நிலைசாரும் |
| | | |
| அறநெறி | பண்புகள் | கைகூடும் |
| ஆணவ | மலவிருள் | அகண்றோடும் |
| அறிவுக்கு | ளறிவாய் | நின்றிடுவான் |
| அடியார் | அழைத்திட | வந்திடுவான். |
| | | |
| காவிரி | தந்த | கணநாதன் |
| கற்பக | நாட்டியத் | திருப்பாதன் |
| ஆவணிச் | சதுர்த்தி | வந்துதித்தான் |
| அருமறை | ஆகம | நெறிவிதித்தான் |
| | | |
| அம்மையும் | அப்பனும் | கண்ணோக்க |
| அவதரித் | தானைந் | தொழிலாக்க |
| செம்மணி | மேனிச் | சிங்காரன் |
| திருவளர் | பாசாங் | குசவீரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆதிவிக் | னேஸ்வர | அருளாளா |
| அம்பிகை | வல்லபை | மணவாளா |
| போதக | முகனே | வாஎன்று |
| போற்றிடுவோம் | அவன் | முன்சென்று |

# எங்களைக் காக்கும் பிள்ளையார்

| | | |
|---|---|---|
| எங்களைக் | காக்கும் | பிள்ளையார் |
| எங்கும் | நிறைந்த | பிள்ளையார் |
| சங்கர | ரூபப் | பிள்ளையார் |
| சக்தி | அணைத்த | பிள்ளையார் |
| | | |
| எண்ணிய | வடிவுடைப் | பிள்ளையார் |
| இபமுகம் | கொண்ட | பிள்ளையார் |
| கண்ணால் | அருளும் | பிள்ளையார் |
| கைத்தல | நிறைகனிப் | பிள்ளையார் |
| | | |
| அங்குச | பாசப் | பிள்ளையார் |
| அறுகம் | புல்லுப் | பிள்ளையார் |
| திங்களைக் | காய்ந்திடும் | பிள்ளையார் |
| சிங்க | சதுர்த்திப் | பிள்ளையார் |
| | | |
| அசுரனை | வாட்டிய | பிள்ளையார் |
| அவன் மேல் | அமர்ந்திடும் | பிள்ளையார் |
| இசையில் | ஆடிடும் | பிள்ளையார் |
| இடையூ | றகற்றும் | பிள்ளையார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வேண்டும் | வரந்தரும் | பிள்ளையார் |
| வினைகணக் | கழித்திடும் | பிள்ளையார் |
| நீண்ட | துதிக்கைப் | பிள்ளையார் |
| நெஞ்சத் | திருப்பார் | பிள்ளையார் |

# கணபதி கணபதி என்று சொல்லுங்கள்

| | | | |
|---|---|---|---|
| கணபதி | கணபதி | என்று | சொல்லுங்கள் |
| கருவினை | நீங்கி | விதியைவெல் | லுங்கள் |
| துணைவரு | வானவன் | முன்புநில் | லுங்கள் |
| தோத்திரப் | பாட்டுடன் | பின்பு செல் | லுங்கள் |
| அன்பெனும் | வலையினில் | அகப்படும் | மூர்த்தி |
| அவனரு | ளால்வரு | மாபெருங் | கீர்த்தி |
| துன்பங்க | ளெல்லாம் | துடைத்திடும் | ஐயன் |
| தொண்டரைக் | காத்திடும் | ஒருதும்பிக் | கையன் |
| வல்லபை | யோடுவ | ரும்மண | வாளன் |
| மந்திர | நான்மறை | புகழ்திருத் | தாளன் |
| சொல்லும் | பொருளும் | சுருதியு | மாவான் |
| தூய்மையில் | லாதவர் | நெஞ்சினில் | மேவான் |
| வாக்கு | மனம்செயல் | வாய்மை | விதிப்பான் |
| மாணடி | யார்மனம் | பாதம் | பதிப்பான் |
| ஊக்கமும் | ஆக்கமும் | நித்தம் | கொடுப்பான் |
| உண்மை | அறிவின்ப | வீட்டில் | விடுப்பான் |
| காலக் | கணக்கினை | அழித்திட | வல்லான் |
| காலனைத் | தடுத்தருள் | செய்திடும் | நல்லான் |
| பாலவல் | முக்கனி | தேங்காய் | படைத்து |
| பயில்வன்னி | அறுகுமந் | தாரை | தொடுத்து |

(கணபதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் கணபதி

**இராகம்: கெம்பீராட்டை** **தாளம்: ஆதி**

ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்
ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்
ஜெய ஜெய கணபதி ஓம் கணபதி ஓம்
ஜெய ஜெய கணபதி ஓம் கணபதி ஓம்

பிரணவ நாதா ஓம் கணபதி ஓம்
பேரரு ளாளா ஓம் கணபதி ஓம்
அரகர முதல்வா ஓம் கணபதி ஓம்
அம்பிகை பாலா ஓம் கணபதி ஓம்

ஞானக் கொழுந்தே ஓம் கணபதி ஓம்
நந்தியின் மைந்தா ஓம் கணபதி ஓம்
வானவர் மணியே ஓம் கணபதி ஓம்
மனமணி விளக்கே ஓம் கணபதி ஓம்

அங்குச பாசா ஓம் கணபதி ஓம்
அன்பரின் நேசா ஓம் கணபதி ஓம்
துங்கக் கணேசா ஓம் கணபதி ஓம்
சுடர்ப்பிர காசா ஓம் கணபதி ஓம்

வேத சொருபா ஓம் கணபதி ஓம்
விக்கின ராசா ஓம் கணபதி ஓம்
சோதி நலந்தரும் ஓம் கணபதி ஓம்
தும்பியின் முகனே ஓம் கணபதி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பிக் கணேசன்

இராகம்: தோடி | தாளம்: ஆதி, சதுஸ்ரநடை

தும்பிக் கணேசனைப் பாடங்கள்
தோப்புக் கரணங்கள்போடுங்கள்
நம்பிய வன்கோயில் கூடுங்கள்
நல்ல மலர்மாலை சூடுங்கள் (தும்பி)

பால்பழம் தேங்காய் அவல் அப்பம்
படைத்து வேண்டுங்கள் விண்ணப்பம்
மூலப் பொருளாய் முன்வருவான்
மூழ்வினை நீக்கிச் சுகந்தருவான் (தும்பி)

அறுகு தாமரை மந்தாரை
அலரி சண்பகப் பூவன்னி
நறிய கூவிளை திருவாத்தி
நந்தி மல்லிகை புனைந்தேந்தி (தும்பி)

வக்கிர துண்டா உமைபாலா
வல்லபை நாதா சிவரூபா
விக்கின ராஜா கஜவதனா
விநாய கானைப் புகழ்பேசி (தும்பி)

கல்வியும் செல்வமும் சுகவாழ்வும்
கனத்த வீரமும் தந்திடுவான்
வல்வினைத் துன்பம் தீர்த்திடுவான்
மலரடி தன்னில் சேர்த்திடுவான் (தும்பி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையாரப்பா

இராகம்: நாதநாமக்கிரியை | தாளம்: ஆதி (திஸ்ரம்)

பிள்ளையாரப்பா எங்கள் பிள்ளையாரப்பா
பிரணவமே வடிவான பிள்ளையாரப்பா

உள்ளத்திலே குடியிருக்கும் பிள்ளையாரப்பா
உமையம்மை மடியிருக்கும் பிள்ளையாரப்பா
அள்ளியள்ளி வரந்தருவாய் பிள்ளையாரப்பா
அல்லலெல்லாம் தீர்த்திடுவாய் பிள்ளையாரப்பா

மேருவிலே மறைவரைந்தாய் பிள்ளையாரப்பா
வியாசருக்கு கருணைசெய்தாய் பிள்ளையாரப்பா
காரணனே வாரணனே பிள்ளையாரப்பா
கஜமுகனை யடக்கிவைத்தாய் பிள்ளையாரப்பா

பெருச்சாளி வாகனனே பிள்ளையாரப்பா
பேழைவயிறு கொண்டவனே பிள்ளையாரப்பா
மருப்பேந்தி வந்திடுவாய் பிள்ளையாரப்பா
மந்தாரை வன்னிசூடும் பிள்ளையாரப்பா

வல்லபையின் நாயகனே பிள்ளையாரப்பா
வளரறுகு விருப்புடைய பிள்ளையாரப்பா
மெல்லமெல்ல வந்திடுவாய் பிள்ளையாரப்பா
விளங்குதமிழ்க் கலைதருவாய் பிள்ளையாரப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐங்கரக் கணபதி

**இராகம்: உசேனி** **தாளம்: ஆதி**

ஐங்கரக் கணபதி ஆனந்தக் கணபதி
மங்களக் கணபதி மந்திரக் கணபதி

இன்பம் தருவான் எம்முன் வருவான்
துன்பம் துடைப்பான் துணையாய் இருப்பான்

மூலா தாரன் மும்மதக் களிறு
நூலா தாரன் நுண்கலை யருள்வான்

போற்றிடு மடியார் புந்தியி லுறைவான்
சாற்றிடும் ஞானத் தனிமழை சொரிவான்

அன்புப் பிடியில் அகப்படும் பெருமான்
ஒன்பது கோளுக் கொருபெருந் தலைவன்

பொன்னியை மண்ணிற் பொலிந்திடச் செய்தான்
மன்னிய திருமுறை வழங்கிட வைத்தான்

தமிழ்க்கவிப் பிரியன் தத்துவப் பெரியன்
நமபயம் நீக்கும் நாற்கதித் தலைவன் (ஐங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமெனும் பொருள்

**இராகம்: பூபாளம்** **தாளம்: ஆதி**

ஓமெனும்பொருளே ஓம் கணபதி ஓம்
உத்தமி மகனே ஓம் கணபதி ஓம்
வாமனன் மருகா ஓம் கணபதி ஓம்
வந்தருள் புரிவாய் ஓம் கணபதி ஓம்

சிவனருள் புதல்வா ஓம் கணபதி ஓம்
தேர்க்கால் முறித்தாய் ஓம் கணபதி ஓம்
தவநெறி தருவாய் ஓம் கணபதி ஓம்
தமியனைக் காப்பாய் ஓம் கணபதி ஓம்

முத்தமிழ் எழுதிய ஓம் கணபதி ஓம்
மூஷிக வாகன ஓம் கணபதி ஓம்
சித்திகள் அருள்வாய் ஓம் கணபதி ஓம்
சேவடி தந்தருள் ஓம் கணபதி ஓம்

## சித்தி விநாயர்

**இராகம்: அம்சத்தொனி** **தாளம்: ஆதி**

சித்திவிநாயக சித்திவிநாயக
செல்வ விநாயகனே
சத்திவிநாயக சத்திவிநாயக
தத்துவ நாயகனே
ஆதிவிநாயக ஆதிவிநாயக
அன்பு விநாயகனே
சோதிவிநாயக சோதிவிநாயக
சொர்ண விநாயகனே (சித்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினமில்லா தெங்களைக் காக்கும்
விடையோன் புத்திரனே
பக்தரின் நெஞ்சில், திருநடமாடும்
உமையாள் முதல் மகனே
அப்பாமொ டவல்பொரி முக்கனிசர்க்கரை
பால்தேன் படைத்தேனே
செப்பிடும் பண்ணிசை, திருமுறைபாடி
உன்னை யழைத்தேனே (சித்தி

தலைமிசை குட்டித்தாழ்ந்தேன் எழுந்தேன்
தேங்காய் உடைத்தேனே
கலைநயமெல்லாம் நீதருவாயென
நின்முன் நின்றேனே
ஓம் கணபதி ஓம் ஓம் கணபதி ஓம்
ஓம் கண பதிஎனவே
நாமங்களாயிரம் பாடியழைத்தோம்
நயந்தருள் புரிவாயே (சித்தி)

வல்லபையுடனே வந்தருள் புரியும்
மங்கள பூபதியே
செல்வமும் கல்வியும் வீரமும் தந்திடும்
தெய்வ தயாநிதியே
அறுகுமந்தாரை தாமரை வன்னி
அர்ச்சனை புரிகின்றோம்
செறிகுலை இளநீர் பால் பழத்தாலே
மஞ்சனம் சொரிகின்றோம் (சித்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணநாதன்

**இராகம்: கல்யாணி** **தாளம்: ஆதி**

கணநாதன்சிவ கணநாதன்
கௌரியின் மைந்தன் கணநாதன்
பிணி யிடர்தீர்க்கும் கணநாதன்
பிரணவ ரூபன் கணநாதன்

முட்டிய சூரனைச் சங்கரித்தான்
மூஷிக மாக்கி வீற்றிருந்தான்
கட்டிடும் பாசாங் குசக்கையன்
கற்றவர் மனதில் வாழ் மெய்யன்

தந்தையின் தேரை முறித்துவிட்டான்
தம்பியின் திருமணம் முடித்துவிட்டான்
முந்திய திருமுறை காட்டிவைத்தான்
மோதகத் தாலருள் ஊட்டி வைத்தான்

வன்னிமந் தாரை அறுகாத்தி
வனஜம் வில்வம் புனைந் தேத்தி
கன்னலும் தேங்காய் பழம்பருப்பும்
கடலையும் பாலும்வைத் தழைப்போம்

குருட்டுப் பாம்பினுக் கொளி கொடுத்தான்
கும்பிட்ட நம்பிக்குக் கலை கொடுத்தான்
உரைத்த பாரதம் மலை வரைந்தான்
ஒருபெருங் காகத்தின்வடிவெடுத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகத்தை வயிற்றில் புனைந்திருப்பான்
நடமிடும் மயிலில் அமர்ந்திருப்பான்
கோகர்ண லிங்கப் பதிபூத்தான்
குறுமுனி வேண்டிட வரம்தந்தான்

மூலா தாரத்தின் மூர்த்தியவன்
மொழிந்திடு நான் மறைக் கீர்த்தியவன்
பாலால் தேனால் அபிஷேகம்
பண்ணினர்க் களிப்பான் சிவலோகம்
(கும்மி)

## விக்கினம் தீர்க்கும் (கும்மி)

இராகம்: பைரவி — தாளம்: ஏகம் திஸ்ரநடை

விக்கினம் தீர்க்கும் விநாயகரைப்போற்றி
வீதியெல் லாங்கும்மி யாடுங்களே
முக்கணன் மைந்தனை மோதகக் கையனை
முத்தமி ழாலிசை பாடுங்களே

எங்கேய ழைத்தாலும் அங்கேவந் தெங்களின்
இன்னல்கள் யாவையும் தீர்த்திடுவான்
மங்கள வல்லபை நாயகியம்மையை
வாமத்தி லேகொண்டு வந்திடுவான்

ஓங்கார மந்திர ரூபமுள் ளான்சிவன்
உருவத்தி லேவந்த மூத்தமகன்
பாங்கான பார்வதி பாலனவன்வளர்
பஞ்சபூ தங்களின் மாவயிறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்கும மேனியன் ஐந்துகரத்தினன்
கொம்பொன்று கையிலே ஏந்தியவன்
தங்கும் திருமுறை காட்டியவன்வேத
தத்துவ நர்த்தன மாடியவன்

ஆவணி மாதச் சதுர்த்தியிலேவளர்
அம்புலி யைக்கடிந் தாண்டுகொண்டான்
மேவுமந் தாரனும் சமியும் இரந்திட
விருட்சங்க ளாயுவந் தேற்றுக் கொண்டான்

நாரையூர் நம்பிக்கு ஞானம் கொடுத்தவன்
நரைஒளவை கயிலையில் சேரவைத்தான்
நீரெழுகாவிரி பூமியில் பாய்ந்திட
நிகரிலாக் காகமாய் வந்துதித்தான்

முக்கனி சர்க்கரை அப்பம் அவல்பிட்டு
மோதகம் தேங்காய் பருப்புவகை
இக்கொடு தேன்பாலும் எட்பொரிகடலையும்
எம்பெரு மானுக்குத் தந்திடுவோம்

வில்வை யறுகுமந் தாரைவன்னிதும்பை
வெட்சி மருக்கொழுந் தாத்திமுல்லை
மல்லிகை சண்பகம் தாமரை நந்தியா
வர்த்தம்கொன் றைமலர் சாத்திடு வோம்

நெய்விளக் காலேய லங்கரிப்போம் நின்று
நெஞ்சு நெகிழ்ந்து வழிபடுவோம்
மெய்மனம் வாக்கினால் பிள்ளையாரப்பனை
வேண்டிப் பவப்பிணி நீக்கிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையோடு

இராகம்: சாருகேசி  தாளம்: ஏகம் திஸ்ரஏகம்

நம்பிக்கை யோடு தொழுமடி யார்க்குத்
தும்பிக்கை துணை வருமே - (ஐயன்)
தும்பிக்கை துணை வருமே
எம்பெருமானே கணபதி என்றால்
இன்பசுகந்தருமே - (ஐயன்)
இன்பசுகந்தருமே

அம்பிகை பாலன் ஐங்கரசீலன்
ஆதி யனே என்று - (நம்)
ஆதி யனே என்று
ஐம்புல னொடுங்கிச் சிந்தையில் எண்ணி
ஆலயம் முன்நின்று - (ஐயன்)
ஆலயம் முன்நின்று

மருவிய வாசனைச் சந்தன குங்கும
மஞ்சன நீராட்டி - (தினமும்)
மஞ்சன நீராட்டி
அறுகுமந் தாரை வன்னி தாமரை
ஆய்மலர்பல சூட்டி - (பாதம்)
ஆய்மலர் பல சூட்டி

பால்பழம் இளநீர் பருப்பவல் பாகு
பட்சணம் பொரி கடலை - நல்ல
பட்சணம் பொரிகடலை
கோலத் தீபமொடு முறைமுறை வைத்துக்
கும்பிட்டுப் பதம்போற்றி - குட்டிக்
கும்பிட்டுப் பதம்போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய வரங்கள் எல்லாம் தருவான்
விக்கினம் தீர்த்திடுவான் - வரும்
விக்கினம் தீர்த்திடுவான்
பூண்டிடும் வாழ்வில் பொலி சுகந்தருவான்
பொன்னடியுந் தருவான் - தினம்
பொன்னடியுந் தருவான்

நினைத்த இடமெலாம் நிற்கும் கணபதி
நெஞ்சிலும் நின்றருள் வான் -அவன்
நெஞ்சிலும் நின்றருள்வான்
அனைத்து யிர்களையும் வயிற்றி லடக்கிய
ஐயனைத்தொழுதிடுவோம் - ஐங்கர
ஐயனைத் தொழுதிடுவோம்.

## மூஷிகவாகன

**இராகம்: மோகனம்** **தாளம்: ஆதி (சதுஸ்ரநடை)**

மூஷிக வாகன கணபதியே
மோதக மேந்திய குணநிதியே
பாசம றுக்கும் பசுபதியே
பத்தருக் கருள்வாய் சிவகதியே

ஐந்துக ரத்துப் பெருமானே
அடியார் அழைக்க வருவானே
தந்திமு கத்துத் தற்பரனே
தத்துவ வித்தக சிற்பரனே (மூ)

அண்டங்க ளெல்லாம் நிறைந்தவனே
அரும்பொருள் மேருவில் வரைந்தவனே
மிண்டிய அசுரனைச் செறுத்தவனே
விடையவன் தேரினை முறித்தவனே (மூ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்துயர் தீர்த்திடும் பிள்ளையாரே
வளர்கலை தந்திடும் பிள்ளையாரே
நினைத்தவர் நெஞ்சுறை பிள்ளையாரே
நிறைசுகம் அருள்வீர் பிள்ளையாரே (மூ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓம் நமச்சிவாயம்

**இராகம்: ஆதி** **தாளம்: பூபாளம்**

| | | |
|---|---|---|
| ஓம் நமச் சிவாயம் | ஓம்நமச் | சிவாயம் |
| உலகங்கள் எல்லாம் | ஓம்நமச் | சிவாயம் |
| ஓம் நமச் சிவாயம் | ஓம் நமச் | சிவாயம் |
| உள்ளத்தி லிருப்பான் | ஓம்நமச் | சிவாயம் |
| சங்கர சிவ சிவ | ஓம் | நமச்சிவாயம் |
| சாம்பசதாசிவ | ஓம் | நமச்சிவாயம் |
| லிங்க சொரூபா | ஓம் | நமச்சிவாயம் |
| ஏகாம்பரனே | ஓம் | நமச்சிவாயம் |
| உமை யொருபாகா | ஓம் | நமச்சிவாயம் |
| ஒருபத மெடுத்தாய் | ஓம் | நமச்சிவாயம் |
| நமசிவயப் பொருள் | ஓம் | நமச்சிவாயம் |
| நான் மறை நாயக | ஓம் | நமச்சிவாயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டருக்கரியாய் ஓம் நமச்சிவாயம்
அடியவர்க் கெளியாய் ஓம் நமச்சிவாயம்
தொண்டரைக் காக்கும் ஓம் நமச்சிவாயம்
துணையடி தருவாய் ஓம் நமச்சிவாயம்

சிற்சபை தன்னில் திருநட மிடுவான்
சிருட்டி முதலிய ஐந்தொழில் புரிவான்
கற்பக மாகிக் கருணையும் பொழிவான்
கருதிய செல்வம் உடனே தருவான்

அடியார் துணையாய் அருகில் இருப்பான்
ஆனந்த வாழ்க்கைப் பேறுகள் அருள்வான்
துடியும் சூலமும் தூக்கிய கையன்
சுந்தரத் தில்லையி லாடிடு மையன்

முப்பத்து முக்கோடிதேவரின் தேவன்
மூவரு மறியாத் தேவம கேசன்
ஒப்பரும் சோதி வடிவங்க ளுடையான்
ஒன்றாய்ப் பலவாய் உருவரு வானான்

மண்ணைச் சுமக்க மதுரைக்கு வந்தான்
வாசகம் எழுதத் தில்லைக்கு வந்தான்
கண்ணப்பற் காகக் காளத்தி நின்றான்
காளியொ டாடி நடனத்தில் வென்றான்

பாலைக் கொடுத்து சூலை கொடுத்து
பயில் நூல் காட்டிஓலையைக் காட்டி
நாலு குரவரின் பாட்டு நயந்தான்
ஞானமகன் மொழி கேட்டு மகிழ்ந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பெனும் பிடியில் அகப்படும் சோதி
அறிவால் அறியும் அற்புத நீதி
பொன்மலை மகளைப் பொருந்திய பாதி
புவனச ராசரம் பூத்தஅ நாதி

நீர்மலர் தூவி ஐந்தெழுத்தோதி
நிறைகமழ் தூப தீபங்களேற்றி
நேர்மனம் குவிந்து பாடித் துதிப்போம்
நிமலன் பாதம் நெஞ்சிற் பதிப்போம்

இம்மையும் மறுமையும் இன்பம் தருவான்
இன்னல் தீர்ப்பான் இடபத்தில் வருவான்
வெம்மலம் போக்கி மெய்யருள் புரிவான்
வினைப்பவம் நீக்கி வீடும் தருவான்

# சிற்றம்பலத்தானை

**இராகம்: கேதாரகௌளை** **தாளம்: (ஏகம் திஸ்ரநடை)**

சிற்றம் பலத்தானை நாடுங்கள் - நித்தம்
உற்றதுணைவனைத் தேடுங்கள்

கண்ணால் கண்டிட வாருங்கள் - ஐயன்
காலெடுத் தாடுதல் பாருங்கள்
பண்ணால் திருமுறை பாடுங்கள் - தெய்வ
பக்தி மிகுந்து கூத் தாடுங்கள்

அன்னைசி வகாமி பாகனாய் - ஐயன்
ஆடுகின் றான்நட ராசனாய்
மன்னிய புலிமுனி பதஞ்சலி - நின்று
வணங்கிப் புரிகின்றார் அஞ்சலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்து முக்கோடி தேவர்கள் - ஞான
முனிவர்கள் ஏழிசை நாவர்கள்
செப்பிய மறையவன் நாரணன் - நின்று
சேவிக்கும் சிற்சபைப் பூரணன்

ஒருகையில் உடுக்கினைக் கொண்டவன் - வளர்
ஓங்கார வட்டத்துள் நின்றவன்
ஒருகையில் அக்கினி ஏந்தினான் - அன்பர்
உள்ளத்து வெள்ளத்தில் நீந்தினான்

சிவசிவ சிவ என்ற மந்திரம் - ஐயன்
சிதம்பர மாடிடும் யந்திரம்
தவநெறி யாளர்க்குத் தந்திரம் - ஐயன்
தாண்டவ மேசிவ சுந்தரம்
அன்பு மலர்மிசை நிற்பவன் -மறை
ஆகம மாகிய சிற்பரன்
துன்பமில் லாநெறி பூணலாம் - பவத்
தொல்வினை தீர்த்தருள் பேணலாம்

## நடராசா

**இராகம்: மோகனம்** **தாளம்: ஆதி, ஏகம்**

நடராசா சிவ நடராசா
ஞான தயாபர நடராசா

சிவசிவ சிவசிவ நடராசா
தில்லையில் ஆடும் நடராசா
பவவினை தீர்க்கும் நடராசா
பார்வதி பாகா நடராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைகள் தீர்க்கும் நடராசா
கைலையில் மேவிய நடராசா
தவநெறி காட்டும் நடராசா
சந்திர சேகர நடராசா

அம்பிகை பாகா நடராசா
அருளும் தியாகா நடராசா
உம்பரு மறியா நடராசா
ஓமெனும் பொருளே நடராசா

நமசிவ யப்பொருள் நடராசா
ஞான நடம்புரி நடராசா
அமிர்த கடேசா நடராசா
ஆகம ரூபா நடராசா

செல்வ சுகம் தரும் நடராசா
கல்வி நலம் தரும் நடராசா
நல்வர மருளும் நடராசா
தில்லை சிதம்பர நடராசா

## சங்கரசம்போ

**இராகம்: ஆனந்தக்களிப்பு** **தாளம்: திஸ்ரநடை**

சங்கர சங்கர சம்போ - சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ

தாயும் தகப்பனு மானாய் - எங்கும்
தங்கிய மண்டல நாயக னானாய்
மாயவன் சோதரி உமையை - உனது
வாமத்தில் வைத்து விடையேறி வருவாய் (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சடை எண்டிசை வீசி - ஞான
சிவகாம சுந்தரி யம்மையொ டாடி
அஞ்செழுத் துண்மை விளக்கி - எம்மை
ஆட்கொள்ளும் அம்பலத் தையனே வாராய் (ச)

பூதங்க ளைந்தாகி நின்றாய் - மூத்த
புத்திர னென்று கணேசனைத் தந்தாய்
மோதும் அசுரரை மாய்க்க - வேலன்
முருகைய னைத் தந்து கருணை புரிந்தாய் (ச)

மனைமக்கள் சுற்றம் பிணித்தாய் - அந்த
வலையினிற் சிக்காத நிலையருள் வாயே
கனவிலும் நனவிலும் உன்றன் - திருக்
கழலிணை மறவாத வரமருள் வாயே (ச)

## அரகர சிவசிவ

**இராகம்: சகானா** **தாளம்: ஆதி**

அரகர சிவசிவ பரமேசா
ஐந்தொழில் புரியும் நடராசா
மரகத வல்லி மணவாளா
வல்வினை தீர்க்கும் அருளாளா

சந்திர சேகர சுந்தரனே
சதுர்மறை ஆகம மந்திரனே
சிந்தனைத் தேனே திரிபுரனே
சிவாய நர்த்தன பரிபுரனே (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா உன்னடி பாடவந்தோம்
ஆனந்தத் தேனைத் தேடவந்தோம்
கையால் மாலைகள் சூடவந்தோம்
கருணைத் திருமுகம் காணவந்தோம் (அ)

உனைமற வாத வரந்தருவாய்
ஓங்கிடும் அன்பு மனந்தருவாய்
கனிவுறு தெய்வ சுகந்தருவாய்
காலனை வெல்லும் பதந்தருவாய் (அ)

அம்பிகை ஒருபால் கொண்டாயே
அனைத்துயி ருக்கும் நீதாயே
நம்பெரு மானுனக் கடைக்கலமே
நமச்சி வாயமெம் படைக்கலமே (அ)

# ஓம் என்று சொல்லு

**தாளம்: ஏகம்**

ஓம் ஓம் ஓம் என்று சொல்லு நெஞ்சமே
ஊறு தரும் ஊழ்வினையை வெல்லு நெஞ்சமே
ஓம் ஓம் ஓம் என்று பாடு நெஞ்சமே
ஓங்குசிவ பாத நிழல் தேடு நெஞ்சமே (ஓம்)

பண்ணாலே பாடுகின்ற பத்தரின் முன்னே
பார்வதியோர் பாகனாகக் காட்சி தருவான்
விண்ணாடர் காணாத வேதநாயகன்
விடையேறி அடியாரைக் காக்க வருவான் (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தொழில் புரிவதற்கு காலைத் தூக்குவான்
அன்புடைய மக்களுக்குத் துன்பம் நீக்குவான்
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகுவான்
மனக்கவலை போக்கி அருள் விருந்து மாகுவான் (ஓம்)

கேட்டவரம் தந்தருளும் நாட்டியக் காரன்
கீதமறை ஆகமத்தின் வாக்கியக் காரன்
கூட்டுமலம் வேரறுக்கும் குங்கும வண்ணன்
கொம்பனையும் கந்தனையும் தந்தமுக் கண்ணன் (ஓம்)

ஆதாரம் ஆறேறி ஆடும் நாதனை
அனுதினமும் மலர்தூவி ஆற்று பூசனை
ஓதாமல் ஓதியுணர் ஞானம் பிறக்கும்
உடலாவி நலமாகும் வாழ்வு சிறக்கும் (ஓம்)

## காசிலிங்கம்

**இராகம்: அரிகாம்போதி** **தாளம்: ஆதி**

காசிலிங்கம் காசிலிங்கம்
கைலைமலைப் பவளலிங்கம்
தேசமெலாம் நிறைந்தலிங்கம்
தில்லையிலா காசலிங்கம்

ஆனைக்காவில் அப்புலிங்கம்
அண்ணாமலைச் சோதிலிங்கம்
ஞானக்காஞ்சிப் பூமிலிங்கம்
நதிக்காளத்தி வாயுலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மதுரையிலே | சொக்கலிங்கம் |
| வளர்கடவூர் | அமிர்தலிங்கம் |
| முதுமுதலாய் | இருந்தலிங்கம் |
| மூலப்பொரு | ளானலிங்கம் |

| | |
|---|---|
| சத்திசிவ | ரூபலிங்கம் |
| சத்துசித்தா | னந்தலிங்கம் |
| முத்திதரும் | மோனலிங்கம் |
| முச்சுடர்க்கண் | ஞானலிங்கம் |

| | |
|---|---|
| இறக்கமுத்தி | கொடுக்கும்லிங்கம் |
| இயமன்வரா | தணைக்கும்லிங்கம் |
| பிறப்பறுக்கும் | தருமலிங்கம் |
| பிரணவமாம் | பரமலிங்கம் |

# பரம்பொருள்

**இராகம்: ஆனந்தபைரவி** **தாளம்: ரூபகம்**

| | | |
|---|---|---|
| எங்கும் | நிறைந்தாய் | பரம்பொருளே |
| எல்லாம் | அறிந்தாய் | பரம்பொருளே |
| சங்கர | சிவசிவ | பரம்பொருளே |
| சாம்ப | சதாசிவ | பரம்பொருளே |

| | | |
|---|---|---|
| அன்பே | அருளே | பரம்பொருளே |
| அறிவே | உயிரே | பரம்பொருளே |
| இன்பப் | பழமே | பரம்பொருளே |
| இதயத்தில் | இருப்பாய் | பரம்பொருளே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அப்பா பரம்பொருளே
அண்ட சராசரப் பரம்பொருளே
எம்மா ரமுதே பரம்பொருளே
எங்களைக் காக்கும் பரம்பொருளே

கல்வியின் பயனே பரம்பொருளே
காண்கிற உலகே பரம்பொருளே
செல்வமும் வீரமும் பரம்பொருளே
சிந்தனை எல்லாம் பரம்பொருளே

வருவாய் விடைமேல் பரம்பொருளே
வரம்பல தருவாய் பரம்பொருளே
குருவாய் அருள்வாய் பரம்பொருளே
குறைபொறுத் தருள்வாய் பரம்பொருளே

## இமயக் கைலைக் கிரிவாசா

**இராகம்: லதாங்கி** **தாளம்: ஏகம்**

இமயக் கைலைக் கிரிவாசா
உமையாள் கணவா பரமேசா
நமனை உதைத்த நடராசா
நமச்சி வாய ஞானேசா

பிறவிப் பயனை அறியாதே
பிரபஞ் சத்தில் அலைந்தேனே
அவவினை புரியும் நாயேனை
அருள்விழி காட்டி அணைத்திடுவாய் (இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உயிர்களும் உன்வடிவே
என்று நினைக்கும் நிலைதருவாய்
நில்லாப் புகழை விரும்பாது
நின்னைப் புகழும் வாக்கருள்வாய் (இ)

எல்லாம் உனது செயலெனவே
எண்ணித் தெளியும் மனந்தருவாய்
கல்லா மூடரை யணுகாதே
கற்றவர் உறவை எனக்கருள்வாய் (இ)

பொய்கொலை களவு கட்காமம்
பொருந்தாப் பெருவாழ் வைத்தருவாய்
தெய்வம் தெளியும் கலைஞானத்
தேனைப் பருகத் தந்திடுவாய் (இ)

தந்தை தாயர் குருமுதலோர்
சிந்தை நோவச் செய்யாமல்
அந்தியும் பகலும் தருமநெறி
ஆற்றும்பேற்றை அளித்திடுவாய் (இ)

நானென தென்னும் மலம்நீக்கி
நாண்மலர் கொண்டு நினைப் போற்றி
வானுயர் அன்புச் சிகிரியிலே
மலரொளி காணும் வரந்தருவாய் (இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடப்பாட இனிக்கும்

**இராகம்: சாருமதி** **தாளம்: ரூபகம்**

பாடப்பாட இனிக்குதையா
பரம் பொருளே உனது பாதம்
ஆடி ஆடி அலுக்காத
அம்பலத்தெம் பெருமானே. (பா)

இருவர் தேடி அறியாத
லிங்க சோதிச் சுடர்ப்பாதம்
பரவை யிடம் தூதாகி
வழி நடந்த திருப்பாதம் (பா)

மாணிக்கவா சகற்காக
மண்சுமந்த மலர்ப்பாதம்
பாணபத்ரன் பரிசுபெற
விறகுவிற்ற மென்பாதம் (பா)

ஓடேந்திப் பிச்சை ஏற்க
ஊரலைந்த சிவபாதம்
காடேந்தும் காளியுடன்
கடுகிநட மிடும்பாதம் (பா)

கும்பிடுமார்க் கண்டனுக்காய்க்
கூற்றுதைத்த கொடைப்பாதம்
வெம்பியழும் கௌரியிடம்
விருத்தனென வரும்பாதம் (பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சிறுத்தொண்டன் | மனங்குளிர |
| தேடிவந்த | அருட்பாதம் |
| பொறுத்தநீல | கண்டனுக்குப் |
| பொன்னோடு | தரும்பாதம் (பா) |

| | |
|---|---|
| விஜயனுக்கு | வரங்கொடுக்க |
| வேடுவனாய் | வரும்பாதம் |
| நயமுதவும் | குழந்தைக்கு |
| ஞானப்பால் | தரும்பாதம் (பா) |

| | |
|---|---|
| வரைஏட்டைப் | பாரென்று |
| மணப்பந்தர் | வரும்பாதம் |
| வரைமகளை | மணம்புரிய |
| மாடேறி | வரும்பாதம் (பா) |

| | |
|---|---|
| கண்ணப்பன் | கண்வாங்கக் |
| காளத்தி | வரும்பாதம் |
| பெண்ணிடத்தே | கனிவாங்கப் |
| பெரும்பசிகொண் | டிடும்பாதம் (பா) |

| | |
|---|---|
| பொற்கிழிக்குப் | பாட்டெழுதி |
| புலவனெதிர் | புகல்பாதம் |
| நற்குணத்தின் | அடியவர்க்கு |
| நலங்கொடுக்கும் | துணைப்பாதம் (பா) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்டைச் சிலம்பு

**இராகம்: ஹம்சத்தொனி** **தாளம்: ஆதி**

தண்டைச் சிலம்பு சலசல என்றிட
தாயார் நடனம் புரிகின்றாள்
தொண்டரைக் காக்கும் சூலம்பிடித்து
சுந்தரி துர்க்கை வருகின்றாள்

எல்லாத் திசைகளும் அசைந்து குலுங்க
ஈஸ்வரி செஞ்சடை வீசுகின்றாள்
நல்லார் வாழ நான்மறை ஆகமம்
நளின வாயினால் பேசுகிறாள்

அன்பு விளங்கும் புன்சிரிப்பாலே
அடியார் துயரம் தீர்க்கின்றாள்
துன்பக் கடலில் மூழ்கா வண்ணம்
சுடர்விழி யாலே பார்க்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டங்க ளெல்லாம் ஆட்சிசெலுத்தி
ஐந்தொழில் புரியும் அதிகாரி
பண்டமிழ் பாடும் பாவலர் நாவில்
பயின்றிடும் பலகலை உபகாரி

அம்மா என்றால் அருள்விழியாலே
ஆறுதல் வார்த்தை தந்திடுவாள்
வெம்மா யாமலம் வேரறுத்திடுவாள்
வீடும் சுகமும் வழங்கிடுவாள்

ஓம் சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி என்று
உள்ளங் கனிந்து பாடிடுவோம்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி என்று
உருகி யன்புநீ ராட்டிடுவோம்

## உமாதேவி

**இராகம்: மலையமாருதம்** **தாளம்: ஆதி**

உமையவளே ஞானசத்தி
ஓங்கார ரூபசக்தி
இமயமலை இருந்தசக்தி
இகபரப்பே றருளும்சக்தி

ஆத்தாளே ஆரணியே
அகிலாண்ட காரணியே
கூத்தாடும் சிவமயிலே
குலவுமறை மொழிக்குயிலே

அமிர்தலிங்க அபிராமி
அம்பலத்தின் சிவகாமி
நமசிவாயக் கலைவாணி
நலந்தருபங் கயராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராநோய் தீர்த்திடுவாய்
சிங்கத்திலே வந்திடுவாய்
நீராடும் கைலையிலே
நிரஞ்சனியாய் வீற்றிருப்பாய்

ஆதார மூலத்திலே
அக்கினியாய் எழுந்திடுவாய்
வேதாந்த வெளிச்சுடராய்
மெய்ஞ்ஞான வீடருள்வாய்

உயிருக்குள்ளே உயிராகி
உள்ளியங்கும் சக்கரமே
பயமறுத்துப் பவமறுத்துப்
பதமலரைத் தந்திடுவாய்
எண்ணும்மனம் மொழிகாயம்
ஈஸ்வரியே நின்பணிக்கே
புண்ணியங்கள் புரிவதற்குப்
பொழிந்திடுவாய் திருவருளே

## சிவகாமி

**இராகம்: உசேனி** **தாளம்: ஆதி**

ஓம் சிவகாமி ஓம் சிவகாமி
ஓங்கிய தில்லை நாடகவாமி

அம்பலநாயகி ஆடகசுந்தரி
சம்பூரணியே சர்வாட்சரியே (ஓம்)

திரிபுரசுந்தரி சிவசங்கரியே
அரிமகிழ்சோதரி ஆதிமகேஸ்வரி (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைதரு மகளே கதிதரு மயிலே
மலைதரு முகிலே மதிதரு மமுதே (ஓம்)

உருவேயருவே ஒன்றேபலவே
கருவேஉயிரே கதியேவிதியே (ஓம்)

தாயேவருவாய் சாந்தம் தருவாய்
வாய்மனமிருப்பாய் மறைமொழியுரைப்பாய் (ஓம்)

பிறவிகள் எல்லாம் பெருந்துணை வருவாய்
உறவாய் அறிவாய் உயர்நெறி யருள்வாய் (ஓம்)

ஐம்புல னடக்கம் ஆசையின் ஒடுக்கம்
செம்பொருளுணர்வு சிறியேற் கருள்வாய் (ஓம்)

## ஒவ்வொரு தலத்தில்

**இராகம்: இந்தோளம்** **தாளம்: ஆதி**

ஒவ்வொரு தலத்தில் ஒவ்வொரு வடிவில்
உமையாளிருந்தருள் புரிகின்றாள்
எவ்வாறாயினும் ஏத்திடும் தொண்டரின்
இதயத்தி லேயவள் இருக்கின்றாள்

அன்னைப ராசக்தித் தாயே என்றால்
அந்தக் கணமே வந்திடுவாள்
இன்னலைத் தீர்ப்பாள் எண்ணிய வரங்கள்
எம்பெருமாட்டி தந்திடுவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனொருபாகம் திருநட மாடிச்
சீவரைக் காக்கும் சீமாட்டி
பவவினை நீக்கிப் படுதுயர் போக்கிப்
பதந்தரு வாள்கடைக் கண்காட்டி

உள்ளக் கோயிலில் உணர்வுத் திரியிலே
உருகிடும் அன்பெனும் நெய்யூற்றி
தெள்ளிய அறிவுத் தீபமேற்றினால்
சிவசக்தி சிரிப்புடன் நின்றிடுவாள்

திருவளர் மதுரையில் சோமசுந் தரனொடு
செந்தமிழ் வளர்த்தவள் மீனாட்சி
மருவிய காசியின் முத்தி கொடுக்கிறாள்
வண்ணவிசாலாட்சித்தாயார்

கச்சியில்ஏகாம் பரப்பெரு மானுடன்
கனிந்தறம் புரிவாள் காமாட்சி
மெச்சிடும் நாகையில் நீலாய தாட்சி
மேவும் தொண்டரைக் காக்கின்றாள்

ஒற்றியூரிலே உயர்வடி வம்மை
ஒளிர்குட மூக்கில் மங்களத்தாய்
குற்றா லத்தினில் குழல்வாய் மொழியாள்
கொடை நெல்வேலி காந்திமதி

வருபுள் ளிருக்கு வேளூரதனில்
மாதா தையல் நாயகியார்
திருக்கா ளத்தி ஞானப்பூங்கோதை
திருவண் ணாமலை உண்ணாமுலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைக்காவிலே அகிலாண் டேஸ்வரி
அவிநா சியிலே கருணாம்பிகை
வானம் தொடுமலைத் திருச்சி ராப்பள்ளி
வதிந்திடு வாள்மட்டு வார்குழலி

பேரார் திருப்பா திருப்புலி யூரில்
பெரிய நாயகி வீற்றிருப்பாள்
சீராமாத் தூரில் முத்தாம் பிகையாள்
திருவா ரூர்கம லாம்பிகைத்தாய்

திருவை யாறிலறம் வளர்த்த நாயகி
திருமுல்லை வாயிலில் கொடியிடையாள்
அருட்கழுக் குன்றினில் திரிபுர சுந்தரி
அம்பலத் தாடுவாள் சிவகாமி

புனிதநள் ளாறு பொலிந்திருப்பாள் சிவ
போக மார்ந்த பூண் முலையம்மை
நனிகலை மலரும் திருமறைக்காடு
யாழைப் பழித்தமொழி யம்பிகையாம்

கடவூர் தனிலே அபிராம வல்லி
கபாலீச் சரம்கற் பகவல்லி
முடியார் கைலைப் புகழ்உமை யம்மை
முந்துச மயபுரம் முத்துமாரி

வடபத்ர காளி மலையூர் பகவதி
மன்னிய நயினை நாகேஸ்வரி .
வடிவுடைத் தெல்லித் துர்க்காதேவி
வற்றாப் பழையில் கண்ணகித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கே தீஸ்வரம் கௌரி நாயகி
திருக்கோ ணேஸ்வரம் மாதுமையாள்
அருக்கொ ணாமலை நகுலாம் பிகையாள்
அருள்மு னீஸ்வரம் வடிவம்மை

அங்க ணாக்டவைப் பத்தினி தேவி
அளவை யூர்ச்செல்வ முத்துமாரி
பொங்கும் காரையூர்ச் சுந்த ராம்பிகை
போற்றும் தோற்றமொடு பொலிகின்றாள்

## உன்னழகு

**இராகம்: உசேனி** **தாளம்: ரூபகம்**

உன் னழகைக் கண்ட உள்ளம்
உருகு மம்மா கருணை வெள்ளம்
அன்ன நடை அலங்காரி
அம்பலத்தின் அதிகாரி

புவனமெல்லாம் பூத்தாளே
தவமிருந்து காத்தாளே
சிவயநமக் கூத்தாளே
பவமறுக்கும் ஆத்தாளே (உ)

சிங்காரச் சடையாளே
செஞ்சூலப் படையாளே
சங்கீத நடையாளே
தருமகலைக் கொடையாளே (உ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்துபாருங்கள் மதுரைநகரிலே

**இராகம்: *மோகனம்*** **தாளம்: *ஆதி***

வந்து பாருங்கள் மதுரைநகரிலே
மாதா இருக்கும் திருக்காட்சி
சிந்தைகுளிரும் சிவமீனாட்சி
செய்கின்றாள் அவள் தனியரசாட்சி (வ)

பச்சை மேனி அச்சுதன் தங்கை
பாண்டிராஜனின் புத்திர மங்கை
முச்சுடர்க் கண்ணன் சொக்கனின் தேவி
முத்தமிழ் வளர்த்தாள் மரகதரூபி (வ)

நாலு திசையும் கோலக் கோபுரம்
நயந்த நிழல்தரும் கடம்புத்தாவரம்
சீல மிகும்பொற் றாமரைவாவி
தேவர் பூசிக்கும் வானுயர் தூபி (வ)

சங்கத்தை வகுத்த புலவரின் வரிசை
சரித்திரம் கூறும் சித்திரப் புரிசை
மங்கை தடாதகை வந்திடும் கோலம்
மலையத் துவஜனின் மாதவச் சீலம் (வ)

தேவரையழைக்கும் மணியின் ஓசை
சிந்தனை பெருக்கும் ஐந்தெழுத்தாசை
பாவல ரடியார் பாடிடும் கீதம்
பக்தி சுரக்குது சிவப்பிரசாதம் (வ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் தொண்டரைப் பார்த்தருள் புரிவாள்
நயந்த வரங்கள் உடனே தருவாள்
வீடும் தருவாள் வினைகள் நீக்குவாள்
மெய்ப் பொருளாகிய சோதி காட்டுவாள் (வ)

# அம்மா உமையே

**இராகம்: தன்யாசி** **தாளம்: ஆதி**

அம்மா உமையே ஆதிப ராசக்தி
சரணம் சரணம் சரணம்
அம்பல நாயகி அம்பிகை பார்வதி
சரணம் சரணம் சரணம்
சிம்மா சனியே திரிபுர சுந்தரி
சரணம் சரணம் சரணம்
சிவரூ பிணியே சிற்பர நாரணி
சரணம் சரணம் சரணம்

பூதங்க ளைந்தாய்ப் பொலியும் பூரணி
சரணம் சரணம் சரணம்
புண்ணிய தாரிணி புஜங்க பூஷணி
சரணம் சரணம் சரணம்
மாதங்கி மாலினி வரதம னோன்மணி
சரணம் சரணம் சரணம்
மந்திரஆகமவாசகி சாம்பவி
சரணம் சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவளம் சுரக்கும் செங்கம லாசினி
சரணம் சரணம் சரணம்
திடமிகு வீரத் துர்க்கா தேவி
சரணம் சரணம் சரணம்
கருணா கரியே வெண்கம லாசினி
சரணம் சரணம் சரணம்
கடிநட மாடும் பத்திரகாளி
சரணம் சரணம் சரணம்

அடியார் துணையே அருணோ தயமே
சரணம் சரணம் சரணம்
அருவாய் உருவாய் அருவுரு வானாய்
சரணம் சரணம் சரணம்
மிடிநோய் பிறவி வினைதீர்ப் பவளே
சரணம் சரணம் சரணம்
விரத தவத்தின் பலனருள் பவளே
சரணம் சரணம் சரணம்

கலையும் நிதியும் சுகமும் தருவாய்
சரணம் சரணம் சரணம்
கருதிய சிந்தனை அருளொளி தருவாய்
சரணம் சரணம் சரணம்
குலையும் சிந்தை நிலைபெற அருள்வாய்
சரணம் சரணம் சரணம்
கூற்றன் வராத துணையெனக் கருள்வாய்
சரணம் சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பனை அறியும் ஆற்றலைத் தருவாய்
சரணம் சரணம் சரணம்
அன்பெனும் அமுத ஊற்றினைத் தருவாய்
சரணம் சரணம் சரணம்

முப்பொருள் உணரும் தத்துவம் தருவாய்
சரணம் சரணம் சரணம்
முத்தியும் சித்தியும் புத்தியும் தருவாய்
சரணம் சரணம் சரணம்

# ஆதாரம் நீ

**இராகம்: சங்கராபரணம்** **தாளம்: ஆதி**

ஆதாரம் நீதானம்மா,
ஆறுதல் சொல்வாயம்மா
பாதார விந்தம் வேண்டி
பாடிப் பணிந்தோமம்மா.

மாதாம னோன்மணியே,
மன்றாடுமீஸ் வரியே
வேதாக மம்விளக்கும்
மெய்ஞ்ஞானப் பூங்குயிலே (ஆ)

காற்றிடைப் பஞ்சு போலே,
கலங்கித் தவித்தோ மம்மா
ஆற்றில் துரும்புபோலே
அலைமோதி நொந்தோமம்மா (ஆ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றை உதைத்தாயம்மா
கொடியோரை மாய்த்தாயம்மா
ஆற்றொணா தெங்கள் துன்பம்,
ஆத்தாளே தீர்ப்பாயம்மா (ஆ)

வீட்டை இழந்தோமம்மா,
விளை நிலங்க ளழிந்ததம்மா
நாட்டிலே வாழ்வதற்கு
நடுநடுக்கம் கொண்டோமம்மா (ஆ)

சூட்டும் முடிபுனைந்து
தொல்மதுரை யான்டாயம்மா
பாட்டுத் தமிழ்வளர்த்தாய்
பரிந்துவிழி பார்ப்பாயம்மா. (ஆ)

## கண்ணால் என்னை

**இராகம்: ஆகிரி** **தாளம்: ரூபகம்**

கண்ணால் என்னைப் பாரம்மா
கவலைகள் எல்லாம் தீரம்மா
உண்ணா முலைச்சி சிவகாமி
உனக்கே பொறுப்பென் உடலாவி

பிழைபொறுத் தருள்வதுன் கடனன்றோ
பிள்ளையைத் தாய்விடு வதுநன்றோ
பழமறை பேசிய உமையம்மா
பகவதியேபார் வதியம்மா (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் தருதிரு மகளம்மா
திடமருள் துர்க்கைத் தாயம்மா
கல்வி தரும்சரஸ் வதியம்மா
கற்பக வல்லி மயிலம்மா (க)

பிணியில் லாவாழ் வருளம்மா
பிறவி யறுத்தருள் புரியம்மா
பணிபுரி தொண்டருட் சேரம்மா
பயின்றிடு துணையெனக் காரம்மா (க)

# முத்துமாரி

*இராகம்: புன்னாகவராளி* *தாளம்: ஆதி*

அம்பிகை யேசிவ முத்துமாரி
அண்டங்கள் காத்திடும் முத்துமாரி
நம்பின தொண்டர்க்கு முத்துமாரி
நல்லருள் செய்திடும் முத்துமாரி
வேம்பின் நிழலிலே முத்துமாரி
வீற்றிருப் பாயெங்கள் முத்துமாரி
பாம்பினம் தாலாட்ட முத்துமாரி
பள்ளிகொள் வாயம்மா முத்துமாரி
தீராநோய் தீர்த்திடும் முத்துமாரி
சிங்கத்தில் வந்திடும் முத்துமாரி
நாராயணன் தங்கை முத்துமாரி
ஞானசு கந்தரும் முத்துமாரி
மாரனை மாய்த்திட்டாய் முத்துமாரி
மக்களைக் காத்திட்டாய் முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரந டஞ்செயும் முத்துமாரி
வேண்டும்வ ரந்தரும் முத்துமாரி
தங்கச் சொரூபிணி முத்துமாரி
தற்பர சுந்தரி முத்துமாரி
பொங்கு முடுக்கிசை முத்துமாரி
பொழிந்திட ஆடுவாய் முத்துமாரி
எங்களுக் கருள்செய்ய முத்துமாரி
இங்கே நீ வந்தருள் முத்துமாரி
சங்கர சிவசிவ முத்துமாரி
சரணம் அடைக்கலமே முத்துமாரி

## மீனாட்சி மதுரையில்

**இராகம்: மோகனம்** **தாளம்: ஆதி**

மதுரையில் மேவிய மீனாட்சி
மண்டல மெங்குமுன் அரசாட்சி
சதுர்மறை சொல்வது உன்காட்சி
தவங்களுக் கெல்லாம் நீசாட்சி

மங்கை தடாதகை எனவந்தாய்
மலயத் துவஜனின் மகளானாய்
சங்கத் தமிழ்மொழி காத்திட்டாய்
சைவ வளங்கள் பூத்திட்டாய் (ம)

சொக்கரின் பாகம் வீற்றிருந்தாய்
சொல்மனு நீதிகள் வளர்த்தாயே
இக்கலி யுகத்தில் சைவநெறி
இசைபெறும் இலிங்கம் பூசித்தாய் (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனித் திங்களிற் பொங்கலிட்டு
பாடியும் பரவியும் பூசிக்கிறோம்
எங்களின் கவலையைத் தீர்த்திடுவாய்
இன்ப விழிகளால் பார்த்திடுவாய் (ம)

அம்மா உனதடி யாரெல்லாம்
அலைந்து திரிவதைப் பார்த்திலையோ
இம்மா நிலத்தில் எவரணைப்பார்
ஈஸ்வரியே நீ இரங்காயோ (ம)

## இரங்காயோ

**இராகம்: முகாரி** **தாளம்: ஆதி**

இரங்கா யோநீ இரங்காயோ
ஈஸ்வரி யேமனம் இரங்காயோ
கரும்பே ஞானக் கனிரசமே
கருணா கரியே சிவமயமே

உலகம் காக்கும் பூரணியே
உயிர்க்குயி ராகிய நாரணியே
பலவளம் பூக்கும் பூ மகளே
பரவிடு கலைதரு நாமகளே (இ)

சிங்கத்தில் மேவிய சங்கரியே
சிற்சபை நடமிடும் சுந்தரியே
சங்கம் வளர்த்த தயாபரியே
தருமம் புரிந்த பராபரையே (இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கர லிங்க மனோன்மணியே
தற்பர சோதி மகேஸ்வரியே
மங்கள கைலை உமாதேவி
மந்திர வேத மகாதேவி (இ)

பவவினை யாலே வாடுகிறேன்
பாதை தெரியாமல் ஓடுகிறேன்
சிவநெறி காட்டிக் காத்தருள்வாய்
சீரடி யாரொடு சேர்த்தருள்வாய் (இ)

மலவிருள் சூழ்ந்தெனை அலையாமல்
வழிபடும் மனநிலை குலையாமல்
மலரொடு பூசனை தவறாமல்
மனப்புய லாலே பதறாமல் (இ)

அன்பு வழியிலே வாழவைப்பாய்
அறநெறிப் பெருநெறி சேரவைப்பாய்
நன்றியை மறவாப் பணிதருவாய்
ஞானமும் கல்வியும் எமக்கருள்வாய் (இ)

எத்தனை பிறவியைத் தந்தாயோ
எத்தனை பழிகளைப் புரிந்தேனோ
அத்தனை யிழைகளும் பொறுத்திடுவாய்
அடிமலர் பாடப் பணித்திடுவாய் (இ)

## ஆடுவேனோ

ஆடுவேனோ சுகம் தேடுவேனோ
அம்மா உன் அருளின்றிப் பாடுவேனோ
மாடேறும் ஈசனுக்குவாய்த்த மங்கையே
மாடுமேய்க்கும் மாயனுக்குத் தனித் தங்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணாத எண்ணமெண்ணி இறுமாந்தேன்
இன்பநிலை காணாமல் உடலோய்ந்தேன்
பெண்ணாசை பொன்னாசை பிடித்தலைந்தேன்
பேயாகி நாயகி அறிவிழந்தேன் (ஆ)

செய்தபிழை யத்தனையும் பொறுத்திடுவாய்
சிந்தையிலே பாதமலர் பதித்திடுவாய்
மெய்யடியார் கூட்டத்திலே செலுத்திடுவாய்
வீடுசெல்லும் வழிகாட்டி நடத்திடுவாய் (ஆ)

கைலையிலே வீற்றிருக்கும் சுந்தரவல்லி
கருணைபொழி மயிலைநகர்க் கற்பகவல்லி
வைகையுறு மதுரையுறை அங்கயற்கண்ணி
மன்னுகட வூரில் அபி ராமியம்மையே (ஆ)

## மாரியென்று

*தாளம்: ரூபகம் :திக்ரம்*

மாரியென்று சொல்லச் சொல்ல
மனங்குளிரும் மெல்ல மெல்ல
வீரியென்று சொல்லச் சொல்ல
வினைகருகும் மெல்ல மெல்ல

ஆரணியே பூரணியே
அம்பிகையே நாரணியே
மாரனுயிர் மாய்த்தவளே
மலைமகளே கனியமுதே (மா)

அருவாகி உருவாகி
அருவுருவ மானவளே
கருவாகி உயிராகிக்
காத்தருளும் சிவசக்தியே (மா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தமும் நின்புகழை
சந்தமுடன் நாம்பாட
செந்தமிழைத் தந்திடுவாய்
சிவபூசைச் சுந்தரியே (மா)

ஆணவத்தை வேரறுப்பாய்
அன்புமழை பொழிந்திடுவாய்
பேணுகின்ற புவனமெல்லாம்
பிரகாசம் செய்திடுவாய் (மா)

வரும்பிணிகள் தீர்த்திடுவாய்
மாதாவே காத்திடுவாய்
பெருங்கரகக் கூத்தாளே
பிரபஞ்சம் பூத்தாளே (மா)

## ஓம் சக்தி

**இராகம்: மோகனம்** **தாளம்: ஆதி**

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

ஆதிமறை ஆகமப்பட் டுடையுடுத்து
ஐம்பூதச் செஞ்சோதிக் குடைபிடித்து
நாதகலை விந்துவளர் சடைமுடித்து
ஞானசிவ சுந்தரியே வந்தருளுவாய் (ஓம்)

வெண்கமலம் செங்கமலம் சிங்கமேறி
வீணைமலர் வாள்குலிசம் வேலுந்தாங்கி
பண்கமழும் கிண்கிணியின் பதமசைத்து
பாண்டுரங்கன் சோதரியே வந்தருளுவாய் (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரப் பல்லழகுச் சிரிப்புடனே
செம்மேனி விபூதித் தரிப்புடனே
சங்கீத அட்சரத்து நடையுடனே
சல்லாபப் பைங்கிளியே வந்தருள்வாய் (ஓம்)

பார்க்குமிட மெங்குமுன துருவமம்மா
பக்திகொண்டு பார்ப்பவர்க்குத் தெரியுமம்மா
கூர்த்தசிவ ஞானமுத்தைத் தாருமம்மா
கொண்டதுயர் பந்தவினை தீருமம்மா (ஓம்)

உற்றதுணை இங்கொருவ ரில்லையம்மா
ஓங்கார நடமிடும் தில்லையம்மா
பெற்றவளே நானுனது பிள்ளையம்மா
பேசுகருஞ் செம்பொன்புகை
வெள்ளையம்மா

(ஓம்)

## சிவசக்தி என்று

தாளம்: ஆதி

சிவசக்தி என்று திருவெண்ணீறு
தினமும் நீபூசு
சிவாய நமஓம் சிவசக்தி என்று
சேவடிப்புகழ் பேசு (ஓம்)

கடிமலர் தூவி உருத்திரமாலை
கழுத்தினி லேபோடு
திடமிகு ஞானத் திருமுறை யெல்லாம்
தேனிசை யொடுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை குளிர்ந்து தொண்டுகளாற்றிச்
சேரடி யாரோடு
அந்திய காலன் வந்தணு காமல்
அம்பிகை துணைதேடு (ஓம்)

ஆதிப ராசக்தி அம்பிகை சுந்தரி
அமிர்தா அபிராமி
சோதிம கேஸ்வரி சுமங்கலை சங்கரி
துர்க்கை மகாகாளி (ஓம்)

ஞானச ரோஜினி நாரணி சரஸ்வதி
நந்தினி சிவகாமி
தீனத யாபரி மோனம னோன்மணி
செல்வி உமாதேவி (ஓம்)

சாம்பவி சூலினி தற்பரை சிற்பரை
சம்பூ ரணிமாரி
பாம்பணி காரணி பகவதி ஆரணி
பரிபா லினிகௌரி (ஓம்)

சந்திர சேகரி தர்மினி யோகினி
சாந்தினி ஜெகன்மாதா
மந்திர நாயகி சிவைகா மாட்சி
வாமினி மீனாட்சி (ஓம்)

கருணா கரிஜெக கற்பகவல்லி
காசிவிசாலாட்சி
அருணேஸ் வரிமனு வித்யா அகுலா
அமிர்தா ஸ்ரீலலிதா (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலெடுத் தாடும் சிவனோ டாடும்
கனகேஸ் வரிபாதம்
கோலத்தை நினைந்து கும்பிடுவார்க்குக்
கொடுக்கும் சிவபோதம் (ஓம்)

ஸ்ரீ மனோன்மணி

## அலங்கார நாயகி

இராகம்: கரகரப் பிரியா தாளம்: ஆதி

அலங்கார நாயகியே மனோன்மணியம்மா
ஐந்தெழுத்து வடிவுடையாய் மனோன்மணியம்மா
கலங்காத வாழ்வுதவும் மனோன்மணியம்மா
கற்பகமாய் அருள்புரிவாய் மனோன்மணியம்மா

சதாசிவன் பங்குடையாய் மனோன்மணியம்மா
சதானந்தப் பேறருள்வாய் மனோன்மணியம்மா
சிதாகாச வெளியினிலே மனோன்மணியம்மா
திருநடனம் புரிவாயே மனோன்மணியம்மா

திருமகள் நீ கலைமகள் நீ மனோன்மணியம்மா
தேவிதுர்க்கை யம்பிகைநீ மனோன்மணியம்மா
உருவருவாய் விளங்கிடுவாய் மனோன்மணியம்மா
உள்ளத்தின் ஒளிவிளக்கே மனோன்மணியம்மா

கற்றவரின் கனிவிருந்தே மனோன்மணியம்மா
கருவினைக்குத் தனிமருந்தே மனோன்மணியம்மா
நற்றுணையாய் வந்தருள்வாய் மனோன்மணியம்மா
நாராணனின் சோதரியே மனோன்மணியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கார சோதிக்குள்ளே மனோன்மணியம்மா
ஒண்சுடராய் எழுந்திடுவாய் மனோன்மணியம்மா
நீங்காதென் நெஞ்சிருப்பாய் மனோன்மணியம்மா
நிரயமிலாக் கதிதருவாய் மனோன்மணியம்மா

## அம்மா மனோன்மணி

**இராகம்: சுபபந்துவராளி** **தாளம்:திஸ்ரகதி**

ஐந்தெழுத் தாகிய அம்மா மனோன்மணி
ஆதிச தாசிவ அம்மா மனோன்மணி
சிந்தனைத் தேனே அம்மா மனோன்மணி
சிதம்பர ஜோதி அம்மா மனோன்மணி
பந்தம றுக்கும் அம்மா மனோன்மணி
பத்திபெ ருக்கும் அம்மா மனோன்மணி
மந்திர ரூபி அம்மா மனோன்மணி
மங்கள தேவி அம்மா மனோன்மணி
தத்துவ நாயகி அம்மா மனோன்மணி
சச்சிதா னந்த அம்மா மனோன்மணி
சித்தம மர்ந்தாய் அம்மா மனோன்மணி
தெய்வசு கந்தரும் அம்மா மனோன்மணி
மூவரு மானாய் அம்மா மனோன்மணி
முத்திகொ டுப்பாய் அம்மா மனோன்மணி
காவலு மானாய் அம்மா மனோன்மணி
கருணாம் பிகையே அம்மா மனோன்மணி
உயிருக்குள் உயிரே அம்மா மனோன்மணி
ஊழ்வினை நீக்கிடும் அம்மா மனோன்மணி
இயலிசை நாடக அம்மா மனோன்மணி
இலிங்கத்தில் தங்கிய அம்மா மனோன்மணி
திருநீற் றுருவே அம்மா மனோன்மணி
செபமணி மாலை அம்மா மனோன்மணி
எருதினில் வந்தருள் அம்மா மனோன்மணி
எமதிடர் தீர்ப்பாய் அம்மா மனோன்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கை

## சிங்கத்திலே வந்திடுவாய்

*இராகம்: தேவகாந்தாரி* *தாளம்: ஆதி*

சிங்கத்திலே வந்திடுவாய் துர்க்கைத் தாயே - எங்கள்
தீவினைகள் தீர்த்திடுவாய் துர்க்கைத்தாயே
சங்கரனின் பங்கிருப்பாய் துர்க்கைத்தாயே - எங்கள்
சஞ்சலங்கள் தீர்த்திடுவாய் துர்க்கைத் தாயே

மாளா மகிடன் தலை துர்க்கைத்தாயே - நீ
வாளால் துணித்து வென்றாய் துர்க்கைத் தாயே
நீளாழி மாயனுக்குத் துர்க்கைத் தாயே - நீ
நிறைவான சோதரியே துர்க்கைத்தாயே

செவ்வான மேனியளே துர்க்கைத் தாயே - நீ
தேசவிளக் காகிநிற்பாய் துர்க்கைத் தாயே
ஒவ்வாத கொடியவரை துர்க்கைத் தாயே - நீ
ஒடுக்கியருள் செய்திடுவாய் துர்க்கைத் தாயே

கமல முகத்தழகி தூாக்கைத்தாயே - திருக்
காலில் சிலம்பழகி துர்க்கைத்தாயே
நமசி வயநடனி துர்க்கைத்தாயே - சிவ
ஞான சுமங்கலியே துர்க்கைத்தாயே

எமக்கருள் செய்திடுவாய் துர்க்கைத்தாயே -வரும்
எமபயம் தீர்த்திடுவாய் துர்க்கைத் தாயே
சுமக்கும் பவம் நீக்கும் துர்க்கைத்தாயே - உன்
துணையடி தந்திடம்மா துர்க்கைத்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் துர்க்கையம்மா

(பேரின்பக் காதல்)

எங்கள் துர்க்கை அம்மா; எங்கள் துர்க்கை அம்மா
பொங்குதெல்லி நகரில் வாழும் எங்கள் துர்க்கை அம்மா (எ)

சோதிவடி வானவளே துன்பமெலாம் தீர்ப்பவளே
ஆதிபர மேஸ்வரியே அண்டமெலாம் காப்பவளே (எ)

உற்றதுணை எவருமின்றி உன்னடியைத் தேடி வந்தோம்
பெற்றவளே நின்புகழைப் பண்ணிசையால் பாடி வந்தோம் (எ)

மகிடன் தலைசங்கரித்து மன்னுயிரைக் காத்தவளே
புகலடையும் தொண்டருக்குப் பொருந்து நலம் தருபவளே (எ)

சந்தானப் பேறுதவிச் சஞ்சலங்கள் போக்கிடுவாய்
சந்தோஷ வாழ்வருள்வாய் தருமநெறி காட்டிடுவாய் (எ)

கோபுரம்நீள் கோயிலிலே குமிண்சிரிப்போடிருப்பவளே
தீபமணித் தேரேறித் திருவீதி வருபவளே (எ)

உளமுருகும் அடியவரை ஊறுபடா தனைத்திடம்மா
வளர்கவலை யில்லாமல் வாழவழி காட்டிடம்மா (எ)

தேவகுலச் சிறைமீட்கச்சித்திரவேல் கொடுத்தாயே
நாவடங்கி நடுங்கிநிற்கும் நமதுதுயர் தீராயோ (எ)

சிங்கத்தின் மீதெழுந்த திங்களெனப் பொலிபவளே
செங்கமலப் பொற்பாதத் தேன்மாரி பெய்திடம்மா (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலட்சுமியம்மா

**இராகம்: சிவரஞ்சனி** **தாளம்: ஆதி**

செங்கமல மீதிருக்கும் இலட்சுமியம்மா
செல்வநலம் தந்திடுவாய் இலட்சுமியம்மா
மங்கலப்பொன் வாழ்வருள்வாய் இலட்சுமியம்மா
மதிதருவாய் கதிதருவாய் இலட்சுமியம்மா

சந்தான விஜயகஜ இலட்சுமியம்மா
தனதான்ய ஆதிவீர இலட்சுமியம்மா
சந்தோஷ ஐஸ்வரிய இலட்சுமியம்மா
சகலலோக ரட்சகியே இலட்சுமியம்மா

வெற்றிலையில் திலகமிட்டோம் இலட்சுமியம்மா
விளக்கேற்றி மாலையிட்டோம் இலட்சுமியம்மா
உற்றதுயர் தீர்ப்பாயே இலட்சுமியம்மா
ஒளிமயமாம் வாழ்வருள்வாய் இலட்சுமியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்பாரம்மா

இராகம்: ஸ்ரீ ரஞ்சனி | தாளம்: ஆதி

செல்வமகா லட்சுமியே கண்பாரம்மா
நல்விளக்காய் எங்களை நீ காப்பாயம்மா

ஆனந்த வாழ்வுதரும் ஆதிலட்சுமி
ஆருயிரின் பசிதீர்க்கும் தான்யலட்சுமி
மானமுயர் வீரந்தரும் தைர்யலட்சுமி
வருகருணை மழைபொழியும் கஜஇலட்சுமி

மகப்பேறு தந்திடுசந் தானலட்சுமி
வாழ்வெல்லாம் வெற்றிதரும் விஜயலட்சுமி
புகழ்கல்வி தருகின்ற வித்தியாலட்சுமி
புனிதமான நிதிகொடுக்கும் தனவிலட்சுமி

சிந்தனையில் சிவம்சுரக்கும் சோதிலட்சுமி
சிகரமலை வீடுதரும் ஞானலட்சுமி
புந்தியிலே நிறைந்திடுசெள பாக்யலட்சுமி
புனிதமனைச் சிறப்புதவும் வரதலட்சுமி

பொன்செய்யும் மருந்தாக வருவாயம்மா
புண்ணியங்கள் புரியவரம் தருவாயம்மா
என்மனத்தே கற்பகமாய் இருப்பாயம்மா
எழுபிறப்பும் நின்கருணை சுரப்பாயம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயே சரஸ்வதி

**இராகம்: சரஸ்வதி** **தாளம்: ஆதி**

தாயே சரஸ்வதி வருவாயே
சகலக லாநிதி தருவாயே

வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாய்
வீணையும் வேதமும் வைத்திருப்பாய்
வள்ளற் கரத்தால் வரந்தருவாய்
வாழ்வு மலர்ந்திடு சுகந்தருவாய் (தா)

செம்பொற் சிலம்புகள் குலுங்கிடவே
திருச்சடை மணிமுடி விளங்கிடவே
உம்பரும் இம்பரும் பாடிடவே
உனதடி யார்மகிழ்ந் தாடிடவே (தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர வதனம் நிலவெறிப்ப
தரளப் புன்னகை அருள்சுரப்ப
சந்தன குங்கும மணம்வீச
சந்ததம் சிந்தனைக் கலைபேச (தா)

அண்டச ராசரம் பூத்தவளே
ஆருயி ரெல்லாம் காத்தவளே
தொண்டருக் கருளும் சுந்தரியே
துரியப தந்தரும் சுதந்தரியே (தா)

## ஞானவடிவான சரஸ்வதி

**இராகம்: வாசஸ்பதி** **தாளம்: ஆதி**

ஞானவடிவான நாமகளே - கலை
நாயகியே அருட் பாமகளே
தான தவநெறிக ளூட்டிடுவாய் - வெள்ளைத்
தாமரைப் பூவில் வீற்றிருப்பாய்

பங்கயன் நாவில் பயின்றிடுவாய் - உன்
பக்தரின் நெஞ்சில் நின்றிடுவாய்
பொங்கிய கல்வி சுரந்திடுவாய் - தமிழ்
பொலிந்திடு புகழ்மிகு வரந்தருவாய் (ஞா)

ஐம்பத்தொ ரட்சர மானவளே - சதுர்
ஆரண ஆகம நாயகியே
கைம்மலர் தூவி வணங்கிடுவோர் - மனக்
கலக்கமில் லாமல் வாழவைப்பாய் (ஞா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிங்கு வடிவுடைய பாரதியே - சிவ
பாக்கியம் தந்திடும் சாரதியே
உள்ளங்குளிர் இன்பம் தருவாயே - எங்கள்
உயிர்க்குயி ராகி உறைவாயே

வித்தைக ளெல்லாம் கைகூட - உன்
விரைகழற் றேனுண்டு கூத்தாட
சத்திக ளெல்லாம் அருளம்மா - நீ
தத்துவ மங்களப் பொருளம்மா

வீணையும் மாலையும் சதுர்மறையும் - கரம்
விளங்கிட வருங்கலை வாணியம்மா
காணுல கெங்கும் நலம்பூக்க - வளர்
கலைமயி லாடும் வேணியம்மா

# அம்மா சரஸ்வதி

**இராகம்: பூபாளம்** **தாளம்: ஆதி**

| | | |
|---|---|---|
| அம்மா | சரஸ்வதி | வந்திடுவாய் |
| ஆய | கலாநிதி | தந்திடுவாய் |
| பெம்மான் | பிரமன் | நாவினிலே |
| பேணிடு | தாமரைப் | பூவினிலே |
| நின்மா | ணடியார் | நெஞ்சினிலே |
| நீங்கா | துறையும் | கலைக்குயிலே (அ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வேதமும் | வீணையும் | தாங்கிடுவாய் | |
| விளங்குமுத் | தமிழில் | தேங்கிடுவாய் | |
| போதமும் | வீடும் | சுரந்திடுவாய் | |
| பூதமைந் | தாகிப் | பரந்திடுவாய் | (அ) |

| | | | |
|---|---|---|---|
| வாக்கிலும் | மனத்தும் | வாழ்பவளே | |
| வளரன்பு | வலையில் | சூழ்பவளே | |
| போக்கும் | வரவுமில் | லாதவளே | |
| பொய்நெஞ் | சினில்நில் | லாதவளே | (அ) |

மாலையணிந்து மணிவிளக் கேற்றி
வந்தனைபாடி சந்ததம் போற்றி
கோலமிகுந்த கும்பத்திற் கண்டு
கும்பிடுகின்றோம் கைம்மலர் கொண்டு (அ)

## பத்திரகாளி

***இராகம்: அடாணா*** ***தாளம்: ஆதி***

பத்திர காளிப ராசக்தி
பாட வரந்தரு வாய்சித்தி
நித்திய முன்னை நெஞ்சிருத்தி
நினைவார்க் கருள்வாய் பெருமுத்தி

தில்லையி லாடும் சுந்தரியே
தீயரை மாய்க்கும் சுதந்தரியே
தொல்லுல கெல்லாம் நின்றாயே
சூரர் குலங்களை வென்றாயே (ப)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்சர மெல்லா முன்னடக்கம்
ஐந்து பூதமும் உன்னடக்கம்
அட்ட திசைகளும் உன்னடக்கம்
அண்ட கோடிகள் உன்னடக்கம் (ப)

செம்பொற் சிலம்பு குலுங்கிடவே
செஞ்சடை ஆடிய சைந்திடவே
நம்பனொ டாலங் காட்டினிலே
நாட்டிய மாடிய நாரணியே (ப)

பொல்லா வினைகள் தீர்த்திடுவாய்
புண்ணிய நெறியில் சேர்த்திடுவாய்
எல்லாம் இங்குன் நடப்பம்மா
எங்களைக் காப்பதுன் பொறுப்பம்மா

(காவடிச்சிந்து)

# ஆதிபராசக்தி

ஆதிபராசக்தி அன்னையே - தில்லை
அம்பலமாடிடும் கன்னியே - திருப்
பாதமலர்த்துணை நம்பியே - கவி
பாடவந்தேனம்மா உன்னையே - அருட்

பரமேஸ்வரி கிருபாகரி
பரிபூரணி வரதேஸ்வரி
சக்தி ஓம் - சிவ சக்தி ஓம்
சக்தி ஓம் - சிவ சக்தி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணையும் மாலையும் வேதமும் - இசை
மேவிய கிண்கிணிப் பாதமும் - நாங்கள்
காணவந்தாடிடும் கற்பகம் - எங்கள்
கருத்திலே வைத்தருள் பொற்பதம் - அருட்

கைலேஸ்வரி கமலேஸ்வரி
மயிலேஸ்வரி நடனேஸ்வரி
சக்தி ஓம் - சிவ சக்தி ஓம்
சக்தி ஓம் - சிவ சக்தி ஓம்

மாயவன் நெஞ்சிலே தங்கினாய் - செல்வம்
மண்டலம் மெங்கணும் பொங்கினாய் - அன்புத்
தூயமனத்திலே வாழுவாய் -தெய்வ
தொண்டர் குழாத்தினைச் சூழுவாய் - அருட்

சுககாரணி மக பூரணி
புவனேஸ்வரி புனிதேஸ்வரி
சக்தி ஓம் - சிவ சக்தி ஓம்
சக்தி ஓம் - சிவ சக்தி ஓம்

சிங்கார நாரணன் தங்கையே - வீர
சிங்கத்தில் மேவிய மங்கையே - மகிட
சங்காரம் புரிவீர துர்க்கையே - நின்று
தருமங்கள் செய்வதுன் நற்கையே - அருட்

சிவரூபிணி அகிமாலினி
தவபூஷணி பவநாசினி
சக்தி ஓம் சிவ சக்தி ஓம்
சக்தி ஓம் சிவ - சக்தி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிடும் பற்பல சக்திகள் - சிவ
சுடரான சிற்பர சித்திகள் - உன்னைப்
போற்றிடு வார்பெறு முத்திகள் - வினைப்
பொக்கிஷ மில்லாத பத்திகள் - அருள்

உமையவளே மலைமகளே
சமயவிதச் சிவமகளே
சக்தி ஓம் சிவ - சக்தி ஓம்
சக்தி ஓம் சிவ - சக்தி ஓம்



# முச்சக்தி நவமாலை

## துர்க்கை

செஞ்சடை யாடிட மங்கல மாலைகள்
சீர்வளர் மார்பி லசைந்தாட
நஞ்சணி கண்டனின் பங்கில மர்ந்திடும்
நாரணியே சிவ சுந்தரியே
வஞ்சனை மெத்திய நெஞ்சசு ரர்க்குல
மகிடனை வீழ்த்திய வாணுதலே
அஞ்சு மடங்கிய அன்பு சுகந்தரும்
அம்பிகை துர்க்கை மகேஸ்வரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து முதற்பலவட்சர கோண
மனைத்தினு மேவிய ஆரமுதே
முந்து மறைப்பொரு ளானவ ளேகுழல்
மோகன வாமனின் சோதரியே
சந்திர முகமலர் குங்கும ஒளிதரத்
தண்ணருள் மழைசொரி கற்பகமே
சந்தத முன்பதம் சிந்தை குளிர்ந்திடத்
தந்தருள் துர்க்கை மகேஸ்வரியே

தத்துவ நர்த்தன சோதி பராபரி
சம்பூ ரணிபார் வதி உமையே
சித்தி நிறைந்திடு புத்தி வழங்கிடு
சிற்பர ஞான தயா பரியே
வித்தகி காலனை வீழ உதைத்திடு
வீரசிங் காசனி பகவதியே
நித்திய முன்னை நினைத்திடு பக்தியை
நின்றருள் துர்க்கை மகேஸ்வரியே

## திருமகள்

எங்கனும் மேவுப ரம்பொரு ளாமரங்
சேகனின் மார்பினி லுறைபவளே
வெங்கலி நீங்கவெ ழுந்தனை பாற்கடல்
வேதமு ழங்கி வளந்தரவே
இங்கெம தூழ்வினை மங்கி யொழிந்திட
இன்பவிழித்துணை ஈய்ந்திடுவாய்
மங்கள நாயகி செங்கம லாசினி
மந்திர ரூபிணி திருமகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திம யங்கிய பித்தனெ னப்புவி
பொங்கிடு மலவிருள் சூழாமல்
சத்தொடு சித்தா னந்தந யம்பெறு
சத்தி யெமக்கருள் பைங்கிளியே
அத்தி முகத்தனு மாறு முகத்தனும்
அத்தையெ னப்புகழ் உத்தமியே
சத்திநி பாத சுகந்தரு காரணி
தங்கசொ ரூபிணி திருமகளே

தானியம் பலகலை விஜயம் செல்வம்
தைரியம் தானம் தவமிகுசந்
தானமொ டோங்கிய ஞானமும் நல்கிடும்
சாந்தினி கற்பக நாயகியே
வானவர் முனிவரர் வந்து பணிந்தெழு
வரத வசீகர திரவியமே
ஈனப வத்துயர் தீரவழித்துணை
ஈந்தருள் இலட்சுமி திருமகளே

## கலைமகள்

ஆதிம னோகரி பூதத யாபரி
ஆகம தாரிணி அடியவரின்
வேதனை வேரற வீணையு மாலையும்
வேதமும் தாங்கிய மின் கொடியே
போதனை தந்தெம தன்புவ ளர்த்திடப்
புந்தியும் நாவும் பொலிந்திடுவாய்
சாதனை யாலனு பூதி பெறுங்கலை
தருவாய் வெண்ணிறக் கலைமகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான சரோஜினி பாரதி யோகினி
நாத விந்தொடுகலை நாடகியே
ஈன மிகுத்துள பாசமறுத்திட
ஈரிரு வேத மிசைப்பவளே
தான தவத்தினர் தேனமு தைப்பெறு
சாத்விக நெஞ்சு தரிப்பவளே
வானுயர் இகபர வாழ்வினைத் தந்தருள்
வாணி சரஸ்வதி கலைமகளே

கவலை யிலாதுன திருமல ரடிகளிற்
கவிமலர் சூட வரந்தருவாய்
தவநெறி தாங்கிய தத்துவ நீதியில்
சகமிசை வாழுந லந்தருவாய்
பவவினை ஓடிடச் சிவகதி கூடிடப்
பண்ணிய பூசையில் நீ வருவாய்
நவவடி யுடையவெண் டாமரைநாயகி
நமசிவ யச்சுடர்க் கலைமகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தனச் சோலையில்

இராகம்: நீலாம்பரி தாளம்: ஆதி

சந்தனச் சோலையில் கொஞ்சிடும் கிளியே
சுந்தரக் கண்ணனே தாலோ தாலோ
சிந்தனைக் கடங்காச் சீலா தாலோ
பந்தனை நீக்கிடும் பாலா தாலோ

தேவகி பெற்றிடும் தேவா தாலோ
தேவர்கள் போற்றிடும் கோவே தாலோ
ஆவணி ரோகிணி பிறந்தாய் தாலோ
ஆயரின் கோகுலம் வளர்ந்தாய் தாலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கைக்கு மூத்த துரையே தாலோ
துவார கைப்பதி அரசே தாலோ
சக்கரம் சங்கு பிடித்தாய் தாலோ
சகடா சுரனை முடித்தாய் தாலோ

மூவடி மண்கேட் டளந்தாய் தாலோ
மோது மிரணியனைப் பிளந்தாய் தாலோ
பாவலர் பின்னே நடந்தாய் தாலோ
பரவை ஆலிலைக் கிடந்தாய் தாலோ

அண்டங்கள் ளெல்லாம் நிறைந்தாய் தாலோ
ஆதி மூவரு மானாய் தாலோ
தொண்டர் தம்மைக் காப்பாய் தாலோ
சோதிக் கருடனில் வருவாய் தாலோ

சந்தான செல்வம் தருவாய் தாலோ
சஞ்சலம் தீர்த்தருள் புரிவாய் தாலோ
நந்தா ஞானக் குருவே தாலோ
நாரா யணாய நமஓம் தாலோ

கோபா லாகோ விந்தா தாலோ
குங்கும பாதா ரவிந்தா தாலோ
பூபா ரந்தனைத் தீர்த்தாய் தாலோ
புண்ணிய ரைப்பதம் சேர்ப்பாய் தாலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமகிருஷ்ணா

***இராகம்: மோகனம்*** ***தாளம்: ஆதி***

ஹரேராம கிருஷ்ணா ஹரேராமகிருஷ்ணா
ஹரேராமகிருஷ்ணா ஹரேராமகிருஷ்ணா

நாகவரத நாராயண ஹரேராமகிருஷ்ணா
நடனராஜ கோவிந்தா ஹரேராமகிருஷ்ணா
மேக வண்ண ரகுராமா ஹரேராமகிருஷ்ணா
வேணுகீத பரந்தாமா ஹரேராமகிருஷ்ணா

மண்ணளந்த மாயவனே ஹரேராமகிருஷ்ணா
மாடுமேய்த்த தூயவனே ஹரேராமகிருஷ்ணா
வெண்ணெயுண்ட கோபாலா ஹரேராமகிருஷ்ணா
வினையகற்றும் பூபாலா ஹரேராமகிருஷ்ணா

திருமகள் புவி மகள் நாதா ஹரேராமகிருஷ்ணா
செங்கமலத் திருப்பாதா ஹரேராமகிருஷ்ணா
கருடன் மீது வருபவனே ஹரேராமகிருஷ்ணா
கருணைவெள்ளம் தருபவனே ஹரேராமகிருஷ்ணா
சங்குதிகிரி கொண்டவனே ஹரேராமகிருஷ்ணா
தந்திடுமவல் உண்டவனே ஹரேராமகிருஷ்ணா
பொங்குதுகில் தந்தவனே ஹரேராமகிருஷ்ணா
பொருந்து தூது சென்றவனே ஹரேராமகிருஷ்ணா

காளியன் மேல் நடனமிட்டாய் ஹரேராமகிருஷ்ணா
கன்றாலே விளவெறிந்தாய் ஹரேராமகிருஷ்ணா
ஆலிலையில் பள்ளிகொண்டாய் ஹரேராமகிருஷ்ணா
அருட்கீதை அறமுரைத்தாய் ஹரேராமகிருஷ்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டமெல்லாம் நிறைந்தவனே ஹரேராமகிருஷ்ணா
அளவையூரில் கோயில் கொண்டாய் ஹரேராமகிருஷ்ணா
தொண்டரெம்மைக் காத்திடுவாய் ஹரேராமகிருஷ்ணா
துணையடிகள் நம்பி நின்றோம் ஹரேராமகிருஷ்ணா

# ஸ்ரீ நாராயணர்

**இராகம்: கல்யாணி** **தாளம்: ஆதி**

நாராய ணாயநம நாராய ணாயநம
நாராய ணாயநம நாராய ணாயநம

அரிராம வைகுந்த நாராய ணாயநம
அபிராம அரங்கேச நாராய ணாயநம
திருமாது திருமார்ப நாராய ணாயநம
செகமாது மணவாள நாராய ணாயநம
அருள்நேமி சங்கேந்தும் நாராய ணாயநம
அடிமூன்று மண்கேட்ட நாராய ணாயநம
இருள் மாயை நீத்தருளும் நாராய ணாயநம
எருதேழு ஜெயங்கொண்ட நாராய ணாயநம
நரசிங்க வடிவான நாராய ணாயநம
நல்லாயர் குலம்வந்த நாராய ணாயநம
குருகீதை மறைசொன்ன நாராய ணாயநம
கோபால கோவிந்த நாராய ணாயநம
காளிங்க நடராச நாராய ணாயநம
கரிவேண்டும் குரல்கேட்ட நாராய ணாயநம
நீளுங்கைச் சாரங்க நாராய ணாயநம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெகிழும்பஞ் சவர்தூது நாராய ணாயநம
எந்தையே கண்ணனே நாராய ணாயநம
எழுமேக வண்ணனே நாராய ணாயநம
நந்தனின் மைந்தனே நாராய ணாயநம
நம்மைவந் தாண்டருள் நாராய ணாயநம

# ஞானமுதல்வா

*இராகம்: அரிகாம்போதி* *தாளம்: ஆதி*

ஞானமுதல்வா வேதசொரூபா நாராயண அரிகோவிந்தா
நாகவரதனே சோதிவண்ணனே நாராயண அரிகோவிந்தா
வானமீதிலே கருடனில் வருவாய் நாராயண அரிகோவிந்தா
வருமடியாரின் குறைகளைத் தீர்ப்பாய் நாராயண அரிகோவிந்தா

பத்தவதாரம் கொண்டு நடித்தாய் நாராயண அரிகோவிந்தா
பக்தர்கள் வேண்டும் வடிவினில் வருவாய் நாராயண அரிகோவிந்தா
புத்திவளர்க்கும் கீதை புகன்றாய் நாராயண அரிகோவிந்தா
புல்லாங்குழலால் தேன்மழைபெய்வாய் நாராயண அரிகோவிந்தா

சங்குசக்கரம் தண்டு பிடித்தாய் நாராயண அரிகோவிந்தா
சராசரங்கள் வாழ்வுற வைத்தாய் நாராயண அரிகோவிந்தா
எங்கும் நிறைந்தாய் நீலவண்ணனே நாராயண அரிகோவிந்தா
எல்லாமறிந்தாய் கமலக்கண்ணனே நாராயண அரிகோவிந்தா

பாரதம் செய்யத் தூது நடந்தாய் நாராயண அரிகோவிந்தா
பாற்கடல்நடுவே பள்ளி கிடந்தாய் நாராயண அரிகோவிந்தா
மாருதிக்கினிய மன்னவனானாய் நாராயண அரிகோவிந்தா
வலியராவணன் தலைகளறுத்தாய் நாராயண அரிகோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்திடு யானையின் துயரம் தீர்த்தாய் நாராயண அரிகோவிந்தா
அரக்கனின் தூணில் நரசிங்கமானாய் நாராயண அரிகோவிந்தா
பழித்திடுகம்சன் தலைபிடித்தழித்தாய் நாராயண அரிகோவிந்தா
பால் தருபூதனை உயிரை முடித்தாய் நாராயண அரிகோவிந்தா

காளிங்க நடனம் ஆடிக்களித்தாய் நாராயண அரிகோவிந்தா
கன்றால் விளவினுக் கெறிந்து சிரித்தாய் நாராயண அரிகோவிந்தா
தாளங்க ளோடு பாடி ஓடுவாய் நாராயண அரிகோவிந்தா
தங்கு கோகுலக் குரவையாடுவாய் நாராயண அரிகோவிந்தா

முனிவர் குசேலர் தருமவ லுண்டாய் நாராயண அரிகோவிந்தா
முதலிரண் டடியால் உலகமளந்தாய் நாராயண அரிகோவிந்தா
தனிஇரு மருதிடை உரலையிழுத்தாய் நாராயண அரிகோவிந்தா
தயிர்பால் திருடித் தருமம் வளர்த்தாய் நாராயண அரிகோவிந்தா

பொன்மகள் புவிமகள் புகழ்நாயகனே நாராயண அரிகோவிந்தா
பொங்கிய வேங்கட மலைநாயகனே நாராயண அரிகோவிந்தா
அன்பரைக்காக்கும் அரங்கேஸ்வரனே நாராயண அரிகோவிந்தா
அடைக்கலம் உனக்கேநாகேஸ்வரனே நாராயண அரிகோவிந்தா

உன்னடி மறவா வரந்தருவாயே நாராயண அரிகோவிந்தா
உள்ளத்திலன் பாய் இருந்திடுவாயே நாராயண அரிகோவிந்தா
இன்னலில்லாத வாழ்வருள் வாயே நாராயண அரிகோவிந்தா
இன்பமாமலை வீடருள்வாயே நாராயண அரிகோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடுவோமே

இராகம்: மாண்டு

தாளம்: ஆதி

நாராய ணாஎன்று பாடுவோமே – அந்த
நாத இசை ஓசையிலே ஆடுவோமே
சீரான கோகுலத்தில் கூடுவோமே – எங்கள்
தேவகியின் பாலகனைத் தேடுவோமே

தாவுசிறைக் கூடத்திலே வந்துபிறந்தான் – தவத்
தாயாம்ய சோதைமடி மீது வளர்ந்தான்
ஆவணியின் ரோகிணிநாள் அட்டமித்திதி – அந்த
ஆண்டவன் அவதரித்த கிருஷ்ண ஜெயந்தி

மாடுமேய்கும் இடையருடன் கூடிவருவான் – ஆயர்
தேடிவைத்த வெண்ணெய் தயிர் திருடித் தருவான்
ஓடுகின்ற நதிகளிலே பாய்ந்து நீந்துவான் பெருங்
காடுகளில் விழும்பழங்கள் கையில் ஏந்துவான்

சிறுவர்களைப் புல்லாங்குழல் ஊதியழைப்பான் – நல்ல
தெய்வக்கதை சொல்லிச் சொல்லி மெல்லச் சிரிப்பான்
அறிவுவளர் பாட்டுப்பாடித் தாளம் போடுவான் தில்லை
அம்பலத்து நாதனைப்போல் கூத்துமாடுவான்

மாயமிட்ட பேய்ச்சிமுலைப் பாலைக்குடித்தான் – கொல்ல
வருமசுரர் குலம்முழுதும் தேடிமுடித்தான்
தீயகம்சன் தலைபிடித்து மண்ணில் மடித்தான் – கோடி
தேவர் சூழ்து வாரகையின் ஆட்சிபிடித்தான்

ஹரேராம ஹரேகிருஷ்ண என்ற போதிலே – நீல
அலங்கார னாய் வருவான் கருடன் மீதிலே
சராசரங்கள் தாங்குகின்ற கண்ணன் பாதமே – பாடி
சரணடைந்து வார்பவருக்கு இல்லை ஏதமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குன்னைத் தேடுவேன்

இராகம்: சகானா
தாளம்: ரூபகம்

எங்குன்னைத் தேடுவேன் கோவிந்தா - உன்னை
எப்படிப் பாடுவேன் கோவிந்தா
பொங்கர வப்பள்ளிக் கோவிந்தா - செல்வ
பூமகள் நாதனே கோவிந்தா

வஞ்சனை வாழ்விலே கோவிந்தா - மனம்
வருந்தித் தவிக்கிறேன் கோவிந்தா
தஞ்சம்சொல் வாரில்லைக் கோவிந்தா - உன்றன்
தாளிணைக் கடைக்கலம் கோவிந்தா

தேவகி மைந்தனே கோவிந்தா - இடைச்
சேரியின் காவலா கோவிந்தா
ஆவலுடன் தேடிக் கோவிந்தா - உன்னை
அலறிய ழைக்கிறேன் கோவிந்தா

நரசிங்க மாகிய கோவிந்தா - எனக்கு
நல்வழி காட்டுவாய் கோவிந்தா
மரமேழு சாடிய கோவிந்தா - என்றன்
மனவாட்டம் தீராயோ கோவிந்தா

நோயும் வறுமையும் கோவிந்தா - உயிர்
நோக வருத்துது கோவிந்தா
பேய் முலைப் பாலுண்ட கோவிந்தா - உன்றன்
பித்தனெ னைக்கண்பார் கோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடனில் மேவிய கோவிந்தா - யமுனைக்
காளிங்க நர்த்தனக் கோவிந்தா
தருமவல் எடுத்துண்ட கோவிந்தா - உனக்குத்
தருவதற் கொன்றில்லைக் கோவிந்தா

புல்லாங் குழல் கொண்ட கோவிந்தா - இந்தப்
புலையனைக் கண்பாராய் கோவிந்தா
கல்லாத மூடன் யான் கோவிந்தா - என்னைக்
கைதூக்கிக் காத்திடு கோவிந்தா

ஆயிரம் ஆயிரம் கோவிந்தா - நீ
அவதாரம் எடுத்தாயே கோவிந்தா
மாயனே ராமனே கோவிந்தா - சோதி
மதுரை மகாராசக் கோவிந்தா

வேங்கட வைகுந்தக் கோவிந்தா மகா
விஷ்ணுவே கிருஷ்ணனே கோவிந்தா
பாங்குயர் பாற்கடற் கோவிந்தா - ஞானப்
பாஸ்கர நாரணக் கோவிந்தா

பாதத்தைக் கைவிடேன் கோவிந்தா - என்னைப்
பாராமற் செல்லாதே கோவிந்தா
ஆதிப் பெருமாளே கோவிந்தா - உனக்
கடைக்கலம் வைத்துக் கொள் கோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுபாம்பே

**இராகம்: புன்னாகவராளி** **தாளம்: ஆதி**

ஆடுபாம்பே அசைந் தாடுபாம்பே - திரு
அரங்கேசன் கண்வளர ஆடுபாம்பே
கோடி கோடி அண்டங்கள் சுமப்பவன் நீ - மாயக்
கோவிந்தன் பள்ளிகொள்ளும் சயனமும் நீ

காவிரியின் நீர்நடுவே வந்து கிடந்தான் - துணை
கருதிவந்த பாண்டவர்க்குத் தூது நடந்தான்
மேவுமுல கெல்லாமீர் அடியிலளர்ந்தான் - பெரு
வீரமிகு மிரணியனின் நெஞ்சுபிளந்தான்

கண்ணனது கண்ணசைய ஆடுபாம்பே - செங்
கமலமலர்க் கையசைய ஆடுபாம்பே
தண்ணருட்பொன் மார்பசைய ஆடுபாம்பே - ஓடித்
தவழ்பாதச் சிலம்பசைய ஆடுபாம்பே

திருமகளைத் துளபமணி மார்பிலேவைத்தான் -வரும்
செகமகளைத் தனதிடது பாகத்தில் வைத்தான்
பெருதிகிரி சங்குதண்டு வில்லுப் பிடித்தான் - கொடும்
பேய்மகளாம் பூதனையின் ஆவிகுடித்தான்

மீன் பன்றி ஆமைநர சிங்கமாகினான் - புகழ்
வீரராமன் பலராமன் வாமனாகினான்
கோன்பரசு ராமன்கண்ணன் கல்கியாகினான் - எண்ணிக்
குறிக்க வொண்ணா வடிவெடுத்தான் கோவிந்தக் கள்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரடியார் கூப்பிடுமுன் தேடிவருவான் - கமலச்
செவ்வாயில் ஊதுகுழல் நாதம்புரிவான்
பாரதத்தேர் ஓட்டும் பார்த்த சாரதியானான் - அந்தப்
பாண்டவரின் பங்குக்கரு ணாநிதியானான்.

நாகேஸ்வ ரத்தமர்ந்த நாராணமூர்த்தி - அன்பர்
நாடுகுளிர் வரமளிக்கும் புண்ணிய மூர்த்தி
மேகத்திலே கருடன் வந்தான் ஆடுபாம்பே - எங்கள்
வினை நீங்கிச் சுகம் மலர ஆடுபாம்பே

# ஜெயராம்

**இராகம்: இந்தோளம்** **தாளம்: ஆதி**

ஜெயராம் ஜெயராம் ஸ்ரீராமா
சீதா நாதா ஸ்ரீராமா
துயரம் நீக்கும் ஸ்ரீராமா
துணையடி தருவாய் ஸ்ரீராமா

தசரதன் தந்திடு திருமகனே
ஜனக ராஜனின் மருமகனே
பசிய நீலமா மேனியனே
பரவு மயோத்தி நாயகனே (ஜெ)

சிவதனு முறித்தாய் ரகுராமா
சீதையை மணந்தாய் புகழ்ராமா
தவமணிப் பாதுகை தனைக்கொடுத்துத்
தம்பி பரதனுக் கரசளித்தாய் (ஜெ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரேழ் ஆண்டு தவம்போனாய்
இருடிகள் போற்றும் மணியானாய்
வீரத் தம்பி இலக்குமணன்
விலகாத்துணையாய்க் கொண்டாயே (ஜெ)

சீதையை மீட்டிட அணைகட்டி
செழித்த வானரக் குலந்திரட்டி
மோதுமி ராவணன் தலையறுத்தாய்
முடிதந்து வீடணற் கரசளித்தாய் (ஜெ)

ஆஞ்ச நேயரை அணைத்தவனே
அறநெறி காத்திடஜெனித்தவனே
தேன்பொழி ராமேஸ் வரங்கண்டு
சிவனடி தொழுதாய் ஜெயங் கொண்டு (ஜெ)

நாரா யணன் நீ அபிராமா
நமக்கருள் புரிவாய் பரந்தாமா
சீரார் வைகுந்த நாயகனே
திருவருள் புரிவாய் மாயவனே. (ஜெ)

## வெங்கடேஸ்வரன்

*தாளம்: ஆதி*

ஆதிவெங் டேஸ்வரனே நமோ நமோ நமோ
சோதிநாத வைகுந்தனே நமோ நமோ நமோ

தேவதேவ தேவதேவ நமோ நமோ நமோ
ஸ்ரீரங்கா ஸ்ரீரங்கா நமோ நமோ நமோ
காவலனே மாயவனே நமோ நமோ நமோ
கருடராச வாகனனே நமோ நமோ நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகநடன கோவிந்தனே நமோ நமோ நமோ
ஞானமுர ளீதரனே நமோ நமோ நமோ
யோகமோனப்பள்ளியனே நமோ நமோ நமோ
நுண்புதுமைப்பழையவனே நமோ நமோ நமோ

பூமகளை நெஞ்சில் வைத்தாய் நமோ நமோ நமோ
புவிமகளை பாகம் வைத்தாய் நமோ நமோ நமோ
தாமரைப் பூக்கண்ணழகா நமோ நமோ நமோ
சங்குநேமி தாங்கிடுவாய் நமோ நமோ நமோ

பாரதத்தின் காரணனே நமோ நமோ நமோ
பாண்டவரின் தூதுவனே நமோ நமோ நமோ
வாரணத்தைக் காத்தவனே நமோ நமோ நமோ
மலைதூக்கிக் குடைபிடித்தாய் நமோ நமோ நமோ

ஆவினங்கள் மேய்த்தவனே நமோ நமோ நமோ
அரக்கர் குலம் தேய்த்தவனே நமோ நமோ நமோ
மூவருமாய் நின்றவனே நமோ நமோ நமோ
மூவடிமண் கேட்டவனே நமோ நமோ நமோ

கடம்பிலேறிப்பாடிடுவாய் நமோ நமோ நமோ
காளிங்கனில் ஆடிடுவாய் நமோ நமோ நமோ
நெடியவனே நரசிங்கனே நமோ நமோ நமோ
நிலவறையில் நீண்டுயர்ந்தாய் நமோ நமோ நமோ

அவலையுண்டு நிதி கொடுத்தாய் நமோ நமோ நமோ
அறிவுணர்த்தும் கீதை தந்தாய் நமோ நமோ நமோ
கவலையில்லாக் கதிதருவாய் நமோ நமோ நமோ
கற்பகப் பூம் பதிதருவாய் நமோ நமோ நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரேராம

தாளம்: ஏகம்

ஹரேராம ஹரேராம ஹரேராம கிருஷ்ணராம்
ஹரேராம ஹரேராம ஹரேராம கிருஷ்ணராம்

நாதப்பிரம்ம வாசுதேவ ஹரேராம கிருஷ்ணராம்
நாகவரத நாராயண ஹரேராம கிருஷ்ணராம்
வேதகீத வெங்கடேச ஹரேராம கிருஷ்ணராம்
மேகவண்ண விஷ்ணுதேவ ஹரேராம கிருஷ்ணராம்

வரதராஜ மங்களாய ஹரேராம கிருஷ்ணராம்
மதுசூதன முரளீதர ஹரேராம கிருஷ்ணராம்
பரமேஸ்வர பாண்டுரங்க ஹரேராமகிருஷ்ணராம்
பத்மநாப சிற்பொரூப ஹரேராம கிருஷ்ணராம்

ஸ்ரீவைகுந்த ஸ்ரீநிவாச ஹரேராம கிருஷ்ணராம்
தேவதேவ ஸ்ரீரங்கேச ஹரேராம கிருஷ்ணராம்
ஸ்ரீமுகுந்த வாமராஜ ஹரேராம கிருஷ்ணராம்
சிவபூஜித லிங்கதாஸ ஹரேராம கிருஷ்ணராம்

சகலோக ரட்சகாய ஹரேராம கிருஷ்ணராம்
சங்கநாத சக்கராய ஹரேராம கிருஷ்ணராம்
பகவகருட வாகனாய ஹரேராம கிருஷ்ணராம்
பத்மதேவி மோகனாய ஹரேராம கிருஷ்ணராம்

சர்வரூப சர்வலோக ஹரேராம கிருஷ்ணராம்
சர்வமந்ர சாமளாய ஹரேராம கிருஷ்ணராம்
தர்மஜோதி ஞானமூல ஹரேராம கிருஷ்ணராம்
சத்திசிவ தத்துவாய ஹரேராம கிருஷ்ணராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபாலா

தாளம்: ஆதி

கோபா லா அரி கோவிந்தாஎனக்
குழந்தைக் கண்ணனைப் பாடிடுவோம்
பூபா லாவென நாராயணனின்
பொன்னடி சென்னி சூடிடுவோம் (கோ)

ஆவின மெல்லாம் அம்மா எனவே
ஆனந்த மாகித் துள்ளிவர
பூமாலைபல புதுவிதம் சூட்டிப்
புண்ணிய குரவை ஆடிடுவோம் (கோ)

வெண்ணெய் தயிர்பால் சர்க்கரை கனிகள்
விரும்பிய அவல்பல பட்சணங்கள்
கண்ணனின் தாமரைக் கையில் கொடுத்து
களிப்பொடு குரவை ஆடிடுவோம் (கோ)

காளிங்கன் மேலே கூத்துகளாடிக்
காளையை வென்ற மாயவனை
தாளங்களோடே மேளங்கள் கொட்டிச்
சங்கீதக் குரவை ஆடிடுவோம். (கோ)

எங்கணும் நிறைந்த கோவிந்தன் பாதம்
எங்களின் மனத்தில் வைத்திடுவோம்
மங்களம் பொங்கும் சங்கு சக்கர
மாயனைப் போற்றித் துதித்திடுவோம் (கோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கெங்கும்

எங்கெங்கும் நீயிருப்பாய் - கண்ணா
ஏழிசைக் குழலிசைப்பாய்
செங்கம லப்பாதா - கண்ணா
திருமகள் மகிழ் நாதா

பாரதம் புரிந்தவனே - கண்ணா
பஞ்சவர் தூதுவனே
மாரி தடுத்தவனே - கண்ணா
மண்ணை யளந்தவனே

எல்லாம் அறிந்தவனே - கண்ணா
இதயம் இருந்தவனே
பொல்லா அசுரர்களை - கண்ணா
போரில் அழித்தவனே

பத்தவ தாரத்தினால் - கண்ணா
பக்தரைக் காத்தவனே
மத்தளை தயிருண்டாய் - கண்ணா
மதுரையில் குடி கொண்டாய்

தேவகி மகனாகி - கண்ணா
சிறையினில் பிறந்தவனே
தேவிய சோதையிடம் - கண்ணா
சேர்ந்து வளர்ந்தவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதிடைத் தவழ்ந்தவனே -கண்ணா
மாடுகள் மேய்த்தவனே
எருதுகள் ஏழடக்கி - கண்ணா
இடைப்பெண்ணை மணந்தவனே

உன்னடிக்கே சரணம் - கண்ணா
ஊழ்வினை தீருமையா
நன்னெறி காட்டிடுவாய் - கண்ணா
ஞான சுகந்தருவாய்

# அரி ஓம் நாராயணா

**இராகம்: *மோகனம்*** **தாளம்: *ஆதி***

அரி ஓம் நாரா யண அரி ஓம்
அரி ஓம் நாரா யண அரி ஓம்

வரத வசீகர அரிநாராயண
வாமன சுந்தர அரிநாராயண
சுரமுர ளீதர அரிநாராயண
சுந்தர மாதவ அரிநாராயண
அன்பரைக் காக்கும் அரிநாராயண
ஆதவ மணியே அரிநாராயண
வன்பிணி தீர்க்கும் அரிநாராயண
வான்மணி வண்ணா அரிநாராயண

திருமகள் நாதா அரிநாராயண
திருநட மாதவ அரிநாராயண
கருட வாகனா அரிநாராயண
காளிங்க நர்த்தன அரிநாராயண

பாரத காரண அரிநாராயண
பாற்கடல் துயின்றிடும் அரிநாராயண
ஆரண கீதா அரிநாராயண
அரங்க நாதா அரிநாராயண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபாலக் கண்ணன்

தாளம்: ஆதி

மாட்டிடையர் கூட்டத்திலே போபாலக்கண்ணன்
பாட்டுப்பாடி வந்திடுவான் கோபாலக் கண்ணன்
ஆட்டமெல்லாம் ஆடிடுவான் கோபாலக் கண்ணன்
அன்பராடு கூடுவான் கோபாலக் கண்ணன்

ஆயர்பாடி வீடுகளில் கோபாலக் கண்ணன்
அழகுடனே தவழ்ந்திடுவான் கோபாலக்கண்ணன்
வாய்நிறைய அவலையுண்டான் கோபாலக் கண்ணன்
மண்ணை அள்ளி மருந்து செய்வான் கோபாலக் கண்ணன்

கோபியர்கள் கூட்டத்திலே கோபாலக் கண்ணன்
குதித்து விளையாடிடுவான் கோபாலக் கண்ணன்
சாமிபூசை செய்திடுவான் கோபாலக் கண்ணன்
சங்கீதம் பெய்திடுவான் கோபாலக் கண்ணன்

பலராமன் அண்ணனுடன் கோபாலக் கண்ணன்
பலதோழர் சேர்த்திடுவான் கோபாலக் கண்ணன்
பலவீடு சென்றிடுவான் கோபாலக் கண்ணன்
பால்வெண்ணெய் திருடிடுவான் கோபாலக் கண்ணன்

பதுங்கிப் பதுங்கி நின்றிடுவான் கோபாலக் கண்ணன்
பாலுறியைக் கண்டிடுவான் கோபாலக் கண்ணன்
சதங்கை கொஞ்சும் காலுடனே கோபாலக் கண்ணன்
சத்தமின்றி நடந்திடுவான் கோபாலக்கண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்கித் தொங்கிப் பார்த்திடுவான் கோபாலக் கண்ணன்ங
தூங்கு முறியைத் திருடிடுவான் கோபாலக் கண்ணன்
அங்கு மிங்கும் பார்த்துப் பார்த்து கோபாலக் கண்ணன்
அரிய வெண்ணெய்க் கலமுடைத்தான் கோபாலக் கண்ணன்

வந்த வெண்ணெய் கண்டானே கோபாலக் கண்ணன்
வாரியள்ளி உண்டானே கோபாலக் கண்ணன்
சிந்தனை செய் அடியவர்க்கு கோபாலக்கண்ணன்
திருவருளும் செய்தானே கோபாலக் கண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ முருகன்

| | | |
|---|---|---|
| சிங்கார | வேலனுக்குப் | பாட்டுக்காவடி |
| திருப்பழனி | முருகனுக்கு | ஆட்டக்காவடி |
| சங்கார | வேலனுக்குத் | தூக்குக்காவடி |
| சல்லாப | முருகனுக்குச் | சோதிக்காவடி |
| வள்ளிதெய்வ | நாதனுக்கு | வண்ணக்காவடி |
| மயிலேறும் | முருகனுக்குத் | தீர்த்தக்காவடி |
| கள்ளவேடக் | கந்தனுக்குப் | பாலின்காவடி |
| கார்த்திகேயக் | குமரனுக்குப் | பழத்தின்காவடி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரகத்து நாதனுக்குக் கரகக்காவடி
இனியபரங் குன்றனுக்கு புஷ்பக்காவடி
வீரசெந்தில் ராஜனுக்கு இரதக்காவடி
மிளிர்சோலை யழகனுக்கு விருதுக்காவடி

கதிர்காம வேலுக்குக்கற் பூரக்காவடி
கழுகுமலை யானுக்கலங் காரக்காவடி
முதுதணிகை முருகனுக்குச் சந்தனக்காவடி
முன்வயலூர் அதிபனுக்குக் குங்குமக்காவடி
வேங்கடத்து வேலனுக்குப் பன்னீர்க்காவடி
விராலிமலைச் சரவணற்குக் கரும்புக்காவடி
தாங்கு செல்வச் சந்நிதிக்கு அன்னக்காவடி
தமிழ் நல்லூர் கந்தனுக்குக் கும்பக்காவடி

மாவைபுரத் தானுக்குமா விளக்குக்காவடி
மண்டூரில் கந்தனுக்கு இழு[illegible]க்கா[illegible]
பூநுணசை முருகனுக்குப் பறவைக்காவடி
பொலிகண்டிக் குருண்டுவரும் குழந்தைக்காவடி

# முருகா வருவாய்

***இராகம்: கெம்பீரநாட்டை*** ***தாளம்: ஏகம், கண்டநடை***

சரவணப வானந்த முருகா வருவாய்
பிரணவ சதானந்த முருகா வருவாய்

சிங்கார மயிலேறி முருகா வருவாய்
தேவகணம் புடைசூழ முருகா வருவாய்
சங்கார வேலேந்தி முருகா வருவாய்
தாளமணி நடையோடு முருகா வருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைமுக அண்ணனொடு முருகா வருவாய்
அப்பனொடுமம்மையொடும் முருகா வருவாய்
ஞானசிவ குருவாகி முருகா வருவாய்
நாரணன் மருகனே முருகா வருவாய்

ஆறுமலை யழகனே முருகா வருவாய்
அகிலாண்ட நாதனே முருகா வருவாய்
ஆறுமுக ராஜனே முருகா வருவாய்
அட்சரவி நோதனே முருகா வருவாய்

காவடிகள் ஆடவே முருகா வருவாய்
கற்றவர்கள் பாடவே முருகா வருவாய்
சேவடிசி லம்பவே முருகா வருவாய்
செஞ்சேவ லசையவே முருகா வருவாய்

அன்பரின் தோழனே முருகா வருவாய்
அடியாரைக் காத்தருள முருகா வருவாய்
துன்பம் துடைத்தருள முருகா வருவாய்
சுந்தரிக ளிருவரொடும் முருகா வருவாய்

பக்தி நெறி காட்டிட முருகா வருவாய்
பந்தவினை ஓட்டிட முருகா வருவாய்
பித்தனென் கவியேற்று முருகா வருவாய்
பிழைபொறுத்தெங்கள் முன் முருகா வருவாய்

புன்னகைமு கங்காட்டி முருகா வருவாய்
பொங்கிமனங் குளிரவே முருகா வருவாய்
என்னப்பன் என்னம்மை முருகா வருவாய்
எங்கள்குல தெய்வமே முருகா வருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் முருகையா

**இராகம்: ஆனந்தபைரவி** **தாளம்: ஆதி திஸ்ரநடை**

ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகையா
உலக மெல்லாம் காப்பவனே ஓம் முருகையா

**சரணங்கள்**

அன்பர்மனக் கோயில் கொண்டாய் ஓம் முருகையா
ஆறுபடை வீடுடையாய் ஓம் முருகையா
இன்பமெலாம் தந்திடுவாய் ஓம் முருகையா
ஏறுமயில் வாகனனே ஓம் முருகையா

சிந்தையிலே உனை நினைந்தால் ஓம் முருகையா
தேனருவி பெருக் கெடுக்கும் ஓம் முருகையா
பந்தபவம் தீர்ப்பவனே ஓம் முருகையா
பதமலரில் சேர்ப்பவனே ஓம் முருகையா

ஓங்காரத் துட்பொருளே ஓம் முருகையா
உபதேச சற்குருவே ஓம் முருகையா
பாங்கான வேலழகா ஓம் முருகையா
பார்வதியார் பாலகனே ஓம் முருகையா

தேவர்சிறை மீட்டவனே ஓம் முருகையா
செந்தமிழ்ப்பா கேட்டவனே ஓம் முருகையா
தாவுகடா வாகனனே ஓம் முருகையா
சண்முகனே சிவமகனே ஓம் முருகையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினைமாவைத் தின்றவனே ஓம் முருகையா
செழுமரமாய் நின்றவனே ஓம் முருகையா
வனமாதை மணந்தவனே ஓம் முருகையா
மனங்குவிய மருந்தொன்றுதா ஓம் முருகையா

கல்விநலம் தேர்ந்தறியேன் ஓம் முருகையா
கனத்தசுக வாழ்வறியேன் ஓம் முருகையா
செல்வநிலை கண்டறியேன் ஓம் முருகையா
திடவீரம் கொண்டறியேன் ஓம் முருகையா

நீயேதான் என்துணைவன் ஓம் முருகையா
நிலைத்த துணை ஒருவரில்லை ஓம் முருகையா
தாயும் நீ தந்தையும் நீ ஓம் முருகையா
சகலசுக போகமும் நீ ஓம் முருகையா

உனை மறவா வரந்தருவாய் ஓம் முருகையா
உனைப்பாடும் கலைதருவாய் ஓம் முருகையா
செனனபிணிப் பயமறுப்பாய் ஓம் முருகையா
தீயேன் செய் பிழை பொறுப்பாய் ஓம் முருகையா

## சிவகுமரா

**இராகம்: *தோடி*** **தாளம்: *ஆதி***

சிவகுமரா ஓம் சிவகுமரா
சிங்காரச் சண்முகச் சிவகுமரா

வள்ளிகுஞ் சரிமகிழ் சிவகுமரா
மங்காத சுகந்தரும் சிவகுமரா
உள்ளம்ம கிழ்ந்திடும் சிவகுமரா
உத்தமி மகனே சிவகுமரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனே சிவகுமரா
சத்திநி பாதா சிவகுமரா
பிரணவ வடிவே சிவகுமரா
பேரரு ளொளியே சிவகுமரா

ஐங்கரன் புகழும் சிவகுமரா
அம்பிகை தழுவும் சிவகுமரா
சங்கர னுருவே சிவகுமரா
சாரங்கன் மருகா சிவகுமரா

கற்பனைக் கெட்டாச் சிவகுமரா
கயவரைக் கிட்டாச் சிவகுமரா
கற்பக தருவே சிவகுமரா
கருணைக் கனியே சிவகுமரா

அட்சர ரூபா சிவகுமரா
ஆகம ரூபா சிவகுமரா
சற்குரு நாதா சிவகுமரா
தத்துவ போதா சிவகுமரா

கடம்ப முருகா சிவகுமரா
கார்த்திகை பாலா சிவகுமரா
இடும்பன் போற்றும் சிவகுமரா
இசைந்த காவடிச் சிவகுமரா

மாவடி சூழும் சிவகுமரா
மலைமிசை வாழும் சிவகுமரா
சேவடி காட்டும் சிவகுமரா
செந்தமிழ் ஊட்டும் சிவகுமரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரனை முடித்தாய் சிவகுமரா
அருள்மணம் முடித்தாய் சிவகுமரா
பசுபதி ஞானச் சிவகுமரா
பரமச டாட்சரச் சிவகுமரா

சுடுபழம் தந்தாய் சிவகுமரா
சுவைத் தமிழ் கேட்டாய் சிவகுமரா
அடிமுடி யில்லாச் சிவகுமரா
அடியரைக் காக்கும் சிவகுமரா

செம்புனம் சென்றாய் சிவகுமரா
தேன்தினை தின்றாய் சிவகுமரா
சம்பூ ரணனே சிவகுமரா
தாளிணை அருள்வாய் சிவகுமரா

# எனக்கொரு கதை சொல்லு

*இராகம்: சிவரஞ்சனி* *தாளம்: ஆதி*

கந்தா எனக்கொரு கதை சொல்லு
கவலை நீக்கிடும் வழி சொல்லு
செந்தா மரையாள் மருமகனே
சிவபூரணி தரு குருகுகனே (க)

சரவண பவனெனப் பாடிவந்தேன்
தாளிணை மலரைத் தேடிவந்தேன்
மருமலர் மாலை சூடவந்தேன்
வருமடி யாரொடு கூடவந்தேன் (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனார் கடம்பலர் அணிதோளா
சிற்பர நர்த்தன திருத்தாளா
வானோர் போற்றும் அருளாளா
வள்ளி குஞ்சரி மணவாளா (க)

கீரனுக் கருளிய புண்ணியனே
கிழவிக்குக் கனிதந்த கண்ணியனே
சூரனை மாய்த்த சுடர் வேலா
தோகையி லாடும் குண சீலா (க)

பழமாய் மலையில் நின்றவனே
பழந்தேன் செந்தினை தின்றவனே
பழம்பொரு ளேமறைப் புதுப் பொருளே
பழவினை தீர்த்தெமை யாண்டருளே (க)

## பழநிவேல்

**இராகம்: தோடி** **தாளம்: ஆதி**

| | |
|---|---|
| பழநிவேல் | பழநிவேல் |
| பழம்நீ எனும் | பழநிவேல் |
| அழகு வேல் | அழகுவேல் |
| ஆண்டியான | அழகு வேல் |
| | |
| சிவனைப் போலக் | கொலுவிருக்கும் |
| சிங்கார வேல் | பழநிவேல் |
| தவமுனிவர்க் | கருள்வழங்கும் |
| சற்குருவாம் | பழநிவேல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகனிக்காய் உலகுசுற்றும்
ஓங்குமயில் பழநிவேல்
கருணை ஆவி னன்குடியில்
கனிந்து நின்ற பழநிவேல்

கடம்பினீழல் காட்சிதந்த
கந்த ஞானப் பழநிவேல்
இடும்பனுக்குப் பதம்கொடுத்த
ஏழுமலைப் பழநிவேல்

மூவருக்கும் முதல்வனாகும்
முன்னைப் பழம் பழநிவேல்
தேவர்சிறை மீட்பதற்குச்
செந்தூர்வந்த பழநிவேல்

வந்த சூரன் மார்பிடந்து
மயில்சேவல் கொண்டவேல்
அந்தரத்துக் குஞ்சரியை
அரியமணம் பூண்டவேல்

செந்தி னைக்கு றக்கொடியைத்
திருடிவதுவை கொண்டவேல்
முந்து மறைப் பொருளுரைத்த
முருகராஜப் பழநிவேல்

சந்ததமும் நினைப்பவரின்
சிந்தைநிற்கும் பழநிவேல்
பந்தவினை தீர்த்திடுவான்
பக்தருக்குப் பழநிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரவணபவனே

இராகம்: சண்முகப்பிரியா    தாளம்: ஆதி

சரவணபவனே குருபர குகனே வருவாய் முருகா
சரண மலரடி மறவாவரமே தருவாய் முருகா
பிரணவ கணபதி அருகிலிருக்க வருவாய் முருகா
பேரருள் இன்பம் பன்னிருகையால் தருவாய் முருகா

அறுபடைமீதில் திருவிளையாடல் புரிவாய்முருகா
அனுதினமுனது பணிபுரிசெல்வம் சொரிவாய்
அறுமுகமதியில் நிலவொளிவீச வருவாய் முருகா
அயில்வேலேந்தி ஆடும் மயில்மேல் வருவாய் முருகா (ச)

சேவற் கொடியும் சித்திரவேலும் விண்ணொளிவீச
தெய்வயானையும் வள்ளியம்மையும் தேன் மொழி பேச
பூவுறையயனும் நாரணாரும் விருது வழங்க
பூரணி யுமையும் பரமேஸ்வரனும் ஆசீர்வதிக்க (ச)

மாமரமாகிய வல்லசூரரை வென்றிடுவேலா
மாம்பழமாக ஆவினன் குடியில் நின்றிடும் பாலா
தாமரையானை மறைமொழிகேட்டுக் குட்டிய வேலா
சங்கரன் காதில் தத்துவவசனம் கூறிய வேலா (ச)

மந்திரகுருவே உனைமறவாத வரந்தா முருகா
மனம் மெய்வாக்கால் உன்பணிசெய்யும் வரந்தா முருகா
சிந்தனை யெல்லாம் உன்புகழ் நினைக்கும் வரந்தா முருகா
சிவநெறி தாங்கும் தொண்டரைப்பேணும் வரந்தா முருகா (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவமுருகா

**இராகம்: சிவரஞ்சனி**

**தாளம்: ஆதி**

சிவ முருகா சிவமுருகா சிங்கார முருகா
தவமுருகா தமிழ்முருகா சங்கீத முருகா

அண்டரெல்லாம் சூழும் செல்வச்சந்நிதி முருகா
கொண்டதுயர் தீர்க்கும் செல்வச்சந்நிதி முருகா
தொண்டர்படை சூழும் செல்வச்சந்நிதி முருகா
தொண்டைமா னாற்றுச் செல்வச்சந்நிதி முருகா

சோதி தரும் சரவணத்தில் தோன்றிய முருகா
சுந்தரவே லாயுதத்தை வாங்கிய முருகா
ஆதிபரா சத்தி தரும் ஆரண முருகா
ஆறுமுகம் தாங்கி வந்த காரண முருகா

தீயாடும் அசுரர்குலம் வென்றிடும் முருகா
செறிவனத்தே வேங்கையாக நின்றிடும் முருகா
ஓயாது மான்தேடித் சென்றிடும் முருகா
உவந்ததினை தேனோடு தின்றிடும் முருகா

ஆனந்த மயிலேறி ஆடிடும் முருகா
ஆலோல இசை கேட்டுத் தேடிடும் முருகா
ஞானவள்ளி குஞ்சரியை கூடிடும் முருகா
நல்லதமிழ் வேதஇசை நாடிடும் முருகா

பிரமாவைச் சிறையிலிட்ட பிரணவ முருகா
பேருலகம் போற்றுகின்ற சரவண முருகா
அரனாருக் குபதேசம் செய்திடும் முருகா
அமரர் தொழக் கருணைமழை பெய்திடும் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவவேடம் தாங்கிவந்த சிவகுரு முருகா
சங்கரனார் தந்தசுடர்ச் சண்முக முருகா
அவ்வினையைத் தீர்த்தினிமை ஆற்றிடும் முருகா
அருளாலே மலைவீட்டில் ஏற்றிடும் முருகா

கந்தனெனப் பேர்படைத்த சுந்தர முருகா
கற்பகமாய் வந்த ஆறு மந்திர முருகா
சிந்தனைத்தேன் பெருகும்வேத சாத்திர முருகா
செந்தமிழின் வடிவான கார்த்திகை முருகா

மயிலேறிப் பழம் வாங்க வந்திடும் முருகா
மலையேறிப் பழம் ஞானம் தந்திடும் முருகா
புயலூர்தி வாழ்வுபெறப் போர்செயும் முருகா
புவனமெலாம் சைவமணச் சீர்செயும் முருகா

## ஒலிக்குது மணி

**இராகம்: மாண்டு** **தாளம்: ஆதி**

ஓம் முருகாவென ஒலிக்குது - மணி
ஓசையினாலுடல் சிலிர்க்குது - அங்கே
தேன்தமிழின்பம் செழிக்குது - அருட்
சிவகும ராவென அழைக்குது - சிவ (ஓம்)

கொக்கரக் கோவெனச் சேவல் கூவுது
குங்கும சந்தனம் முகில்கள் தூவுது
பக்குவ நாட்டியம் மயில்கள் ஆடுது
பக்தரின் வெள்ளம் பரவிக் கூடுது (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபவரிசை சோதி மிளிருது
செந்தினை தேனால் வீதி குளிருது
தூபவரிசைச் சுகந்தம் வீசுது
துரிதக் காவடி கருணை பேசுது (ஓம்)

பேரிகை உடுக்கு வானைப் பிளக்குது
சீரடியார்குழு பஜனை முழக்குது
வாருதி அலையினால் வணக்கம் பாடுது
காலைச் சூரியன் மாலை போடுது (ஓம்)

தண்ணீர்ப் பந்தல்கள் தாகம் தீர்க்குது
அன்ன தானங்கள் பசியைப் போக்குது
கண்ணீர் கவலைகள் எல்லாம் தேயுது
கருணை வெள்ளமே பெருகிப் பாயுது (ஓம்)

## ஆண்டியாய்

**இராகம்: சிவரஞ்சனி** **தாளம்: ஆதி**

ஆண்டியாய் நின்றாலும் பழநியப்பன் - அடியார்
வேண்டும் வரம் தருவான் பழநியப்பன்
நீண்ட மலையில் நின்றான் பழநியப்பன் - ஞானம்
பூண்ட வடிவில் நின்றான் பழநியப்பன்

கயிலை மலையிருந்தான் பழநியப்பன் - ஒரு
கனிக்காக ஓடிவந்தான் பழநியப்பன்
மயில்மிசை உலகமெல்லாம் பழநியப்பன் - ஓடி
வலம்வந்து வீற்றிருந்தான் பழநியப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவினன் குடியினிலே பழநியப்பன் - மன
ஆறுதல் தரவிருந்தான் பழநியப்பன்
காவடி இடும்பனுக்கு பழநியப்பன் - சோதிக்
கழலிணை ப்பேறளித்தான் பழநியப்பன்

ஐயா முருகா என்றால் பழநியப்பன் - கருணை
அள்ளிச் சொரிந்திடுவான் பழநியப்பன்
பொய்யான வாழ்வொழித்துப் பழநியப்பன் - இன்பப்
பொருளான சுகந்தருவான பழநியப்பன்

## மாவைக்கந்தன்

***இராகம்: மோகனம்*** ***தாளம்: ஆதி***

ஆதிமாவைக் கந்தனே வேல் முருகா வேல்
அம்பிகையாள் மைந்தனே வேல் முருகா வேல்
சோதிமயில் வாகனா வேல் முருகா வேல்
சுந்தரியாள் மோகனா வேல் முருகா வேல்

மாமுகத்தை நீக்கியவா வேல் முருகா வேல்
மனக்குறையைப் போக்கியவா வேல் முருகா வேல்
ஓமெழுத்தின் பொருளுரைத்தாய் வேல் முருகா வேல்
ஒருகனிக்காய்ப் பழநிவந்தாய் வேல் முருகா வேல்

ஆறுபடை ராசனே வேல் முருகா வேல்
அடியவர்க்கு நேசனே வேல் முருகா வேல்
நீறுதரும் பூரணா வேல் முருகா வேல்
நித்தமுத்தி காரணா வேல் முருகா வேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடிகள் கூட்டத்திலே வேல் முருகா வேல்
களிப்புடனே நின்றிடுவாய் வேல் முருகா வேல்
பாவலரின் பாட்டினிலே வேல் முருகா வேல்
பண்ணிசையாய் நின்றிடுவாய் வேல் முருகா வேல்

ஆடித்தீர்த்தம் தந்திடுவாய் வேல் முருகா வேல்
ஆன்மசாந்தி கொடுத்திடுவாய் வேல் முருகா வேல்
வாடிவரும் தொண்டருக்கு வேல் முருகா வேல்
மலரடித்தேன் வழங்கிடுவாய் வேல் முருகா வேல்

## உல்லாச நடையுடனே

**இராகம்: ஆரபி** **தாளம்: ஏகம்**

உல்லாச நடையுடனே
சல்லாப நகையுடனே
மல்லாரும் புயமுடனே
வடிவேலா வந்திடுவாய் (உ)

கல்லாலின் நீழலிலே
சொல்லாமல் சொன்னவற்கு
நல்லோசைப் பொருளுரைத்த
ஞானசிவ பண்டிதனே (உ)

சங்கத்தில் வந்தவனே
தங்கத்தின் வடிவழகா
சங்கீத சுந்தரனே
தமிழின்ப மணிக்குழகா (உ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுபயில் மலையினிலே
அறெழுத்துக் கலையினிலே
ஏறுமயில் முதுகினிலே
இமயமகள் மடியினிலே (உ)

சரவணப்பூந் தொட்டினிலே
சதுர்வேதக் கட்டிலிலே
பரவுபடை வீட்டினிலே
பத்தரிசைப் பாட்டினிலே (உ)

கடலாக வருபிறவிக்
கன்மவினைக் கணக்கழிப்பாய்
உடலாவித் துயரகற்றி
உன்னடியில் சேர்த்திடுவாய் (உ)

## முத்துக்குமாரன்

***இராகம்: காவடிச்சிந்து (பைரவி)***

முத்துக்கு மாரனைச் சித்தத்தில் வைத்திட
முத்திந லம்பெறலாம் - சிவ
தத்துவ வித்தக சண்முகனைத் தொழ
சாந்திநி லைபெறலாம் - நல்லூர் (மு)

ஞானக் குருக்கனை மோனத்தில் வைத்திட
ஞாயிறு கண்டிடலாம் - அருட்
கானம் மிகுதமிழ்த் தேனைப்பருகிட
கலைமதி கண்டிடலாம் - நல்லூர் (மு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளிதெய் வானையின் வள்ளலை யுள்ளத்தில்
வைத்திடச் சித்திவரும் - தினம்
புள்ளி மயிலையும் கோழிக் கொடியையும்
போற்றிடப் புத்திவரும் - நல்லூர் (மு)

வேலொடு வந்திடும் பாலமுருகனை
வேண்ட வினையகலும் - கையில்
கோலொடு வந்திடும் குமரன் பழநியைக்
கும்பிட நோயகலும் - நல்லூர் (மு)

அப்பனே கந்தப்பா அந்தாதி யில்லாத
அழகா குமராவென்று - செந்தில்
எப்போதும் வந்தனை தப்பாது செய்பவர்
இருப்பாரே வீடு சென்று - நல்லூர்

சரவண பவகுக பிரணவ குருபர
சந்நிதி பாதஎன்றே - ஓம்
முருகனை நெஞ்சினில் உருகி நெகிழ்ந்தவர்
முழுதுமு ணர்ந்தவரே - நல்லூர்

சிந்து

# சண்முகசீலா

சண்முக சீலா சங்கரன் பாலா
சத்திப்பரம் பொருளே - முருகா
விண்மயில் வீரா சூர சங்காரா
வேதப்பரம் பொருளே - முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கும் அன்பர்கள் சந்திக்கும் சந்நிதி
கந்தப்பரம் பொருளே - முருகா
செந்தமிழ்ச் செல்வம் மந்திரச் செல்வம்
தந்தபரம் பொருளே - முருகா

காவடி கந்தா மாவடிக் கந்தா
காவற்பரம் பொருளே - முருகா
நாவற்குமாரா சேவற் குமாரா
ஞானப்பரம் பொருளே - முருகா

கர்ப்பூரச் செல்வா கார்த்திகைச் செல்வா
கருணைப் பரம் பொருளே - முருகா
பர்ப்பதச் செல்விக் கற்பகம் தந்த
பாலப் பரம் பொருளே - முருகா

ஆடிவருவாய் ஓடிவருவாய்
ஆதிப்பரம் பெருளே - முருகா
காடு மணக்கும் கங்கை மணக்கும்
கதிரைப் பரம் பொருளே - முருகா

உல்லாசக் கந்தா சல்லாபக்கந்தா
உண்மைப் பரம் பொருளே - முருகா
எல்லா மறிந்தாய் எங்கும் நிறைந்தாய்
இன்பப் பரம் பொருளே - முருகா

வள்ளிக் குறத்தி உள்ளத்தைக் கொள்ள
வந்த பரம் பொருளே - முருகா
வெள்ளிப் பொருப்பில் துள்ளிக் குதிக்கும்
வள்ளற் பரம் பொருளே - முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனச் சோதி குங்குமச் சோதி
தங்கும் பரம் பொருளே - முருகா
சிந்தனைச் சோதி வந்தனைச் சோதி
சிகரப் பரம் பொருளே - முருகா

ஆறுமுகவா பன்னிரு கையா
அன்புப் பரம் பொருளே - முருகா
ஆறுபடைமேல் ஏறிநடிக்கும்
அழகுப் பரம் பொருளே - முருகா

ஓம்சர வணபவ ஓம்சிவ குருபர
ஓங்கும ராயநம - முருகா
ஓம்சுர பாஸ்கர ஓம்சச்சிதானந்த
ஓம்சிவ சுப்ரமண்யா - முருகா

கருணையங் கடலே கதிர்வடி வேலா
அருணைப் பரம் பொருளே - முருகா
சரணாரவிந்தம் சஞ்சீவி மந்ரம்
தவவாழ்வு தந்தருளே - முருகா

# அப்பா முருகா

**இராகம்: நீலாம்பரி** **தாளம்: ஆதி**

அப்பா முருகா என அழைத்தால்
அண்டச ராசரம் குளிருமையா
சுப்பிர மணியா என அழைத்தால்
தொடரைம் பூதமும் சுழலுமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா முருகா என அழைத்தால்
கவலைகள் எல்லாம் தீருமையா
செந்தூர்க் குமரா என அழைத்தால்
செல்வங்கள் எல்லாம் சேருமையா

கார்த்திகை பாலா என அழைத்தால்
கனிந்திடு கல்வி பெருகுமையா
கூர்வடி வேலா என அழைத்தால்
கொடுநோய் வறுமை போகுமையா

சரவண பவனே என அழைத்தால்
தத்துவ மெல்லாம் தெரியுமையா
அரிமால் மருகா என அழைத்தால்
அறம் பொருள் இன்பம் கிடைக்குமையா

உமையாள் மகனே என அழைத்தால்
ஓங்கா ரச்சுடர் தோன்றுமையா
இமையோர்க் கிறைவா என அழைத்தால்
எல்லா இன்பமும் சுரக்குமையா

கணபதிக் கிளையோன் என அழைத்தால்
கற்பகச் சோலை நிழல் தருமே
அணிமயில் வீரா என அழைத்தால்
அறிவா லறியும் பொருள் வருமே

குறத்தி குஞ்சரி கணவனென்றால்
கூற்றணு காத கதியுறுமே
அறத்தொழில் குக்குட பதிஎன்றால்
ஆன்மா தெய்வ நிலைபெறுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவாய்வருவாய்

முருகா முருகா
முருகா முருகா

குருவாய் வருவாய் குமரா முருகா
அருவே உருவே அறிவே முருகா

கந்தா கதிர்வேற் கையா முருகா
வந்தாள் பரமன் மகனே முருகா
ஆடும் மயிலா ஐயா முருகா
பாடும் தமிழிற் பயில்வாய் முருகா

வரதா மணியே மாயோன் மருகா
சுரபாஸ் கரனே துணைவா முருகா

வேங்கை யானாய் வேடுவ முருகா
பாங்குயர் ஞானப் பழமே முருகா

அன்பே உமையாள் அமுதே முருகா
இன்பே எங்கள் இறைவா முருகா

சச்சிதா னந்தச் சண்முக முருகா
பச்சைக் குறத்தி பங்கா முருகா

வான்குஞ் சரியாள் மருவும் முருகா
தேன்தினை மாவைத்தின்னும் முருகா

சரவணபவனே பிரணவ நாதா
கருணாகரனே கற்பக முருகா

தவமணிக் குன்றே சரணம் முருகா
கவலைகள் இல்லாக் கதிதா முருகா
முருகா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்காரக் கந்தா

**இராகம்: சிம்மேந்திரமத்திமம்** **தாளம்: ஆதி(திஸ்ரம்)**

சீராரும் நல்லையூர்ச் சிங்காரக் கந்தா
பேர்மேவு நின்பாதம் பாடும்வ ரந்தா

அருளான மயிலேறும் அழகான கந்தா
அதிகார நடமாடி யரசாளும் கந்தா
பொருளான மறைஞானப் பழமான கந்தா
புகழான மலையேறி விளையாடும் கந்தா

கலைநாத விந்தான பெருவாழ்வுக் கந்தா
கமழ் தீப மலர் சூடு முயர்வான கந்தா
மலைமாது மகிழ்கின்ற மகனான கந்தா
மதிசூடும் பரமேசன் குருவான கந்தா

குறமாது துரைமாது மணவாளக் கந்தா
குறையாத சுகவாழ்வு தருசோதிக் கந்தா
மறவாத அடியாரின் துரையான கந்தா
மதியூறி வருவாய்சர்க் கரையான கந்தா

உயிரான உலகான ஒளியான கந்தா
உணர்வான விளைவான குணமான கந்தா
அயிலேறு வடிவேலின் சுடரான கந்தா
அமைவான உயர்சேவற் கொடியாடும் கந்தா

அகிலாண்ட பலகோடி முடிசூடும் கந்தா
அடியாரி னிடந்தேடி வருமின்பக் கந்தா
முகமாறு திகழாதி புகழான கந்தா
முதலீறு நடுவின்றிப் பொலிவான கந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிக்குது

**இராகம்: ஸ்ரீ ரஞ்சனி** **தாளம்: ரூபகம்**

உன்னை நினைந்திட முருகா - நெஞ்சம்
ஊறி இனிக்குது முருகா - முருகா
கன்னித் தமிழ் தந்த முருகா - எங்கள்
கவலையைத் தீர்த்திடும் முருகா - முருகா

பச்சைமா மயிலேறும் முருகா - செல்வப்
பன்னிரு கையனே முருகா முருகா
அச்சுதன் மருகனே முருகா - எங்கள்
ஆறுமுக அழகனே முருகா, முருகா

சரவணப வாகுகா முருகா - ஓம்
சச்சிதா னந்தனே முருகா முருகா
பிரணவ சொரூபனே முருகா - இனிப்
பிறவாமல் அருள்செய்யும் முருகா முருகா

அருள் பொங்கும் அழகனே முருகா ஆதி
அருணா சலத்தனே முருகா முருகா
இருள் பொங்கும் வினை தீர்த்த முருகா - அன்பர்
இதயத்தில் வாழ்கின்ற முருகா - முருகா

வள்ளிகுஞ் சரிநாத முருகா - வெற்றி
வடிவேல் பிடித்துவரும் முருகா முருகா
வள்ளலே சிவஞான முருகா - சோதி
வாரணத் துவஜனே முருகா முருகா (உ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராதவினை தீர்க்கும்

**இராகம்: தேஷ்** **தாளம்: ஏகம் (திஸ்ரம்)**

**பல்லவி**

தீராத வினைதீர்க்கும் முருகா - துயர்
சிறைகாத்த தேவர் குறைதீர்த்த முருகா

**அநுபல்லவி**

சீரோங்கும் முருகா சிவஞான முருகா
தாரோங்கும் முருகா சத்திவேல்முருகா

**சரணங்கள்**

ஆனந்தக் கணபதிக் கன்பான முருகா
ஞானந்தன் பொலிவான நடமாடும் முருகா
வானந்த ஷைத்திட வரும்வீர முருகா
கானம் பொழிந்திடும் கதிர்காம முருகா

ஓங்காரச் செல்வி உமைதந்த முருகா
பாங்கான கருணைப் பரஞ்சோதி முருகா
ஆங்கார சூரரை அடும்வீர முருகா
நீங்காதென் நாவில் நிலைநின்ற முருகா

படையாறு மேறிப் பதமாடும் முருகா
விடையேறு மீசன் விருப்பான முருகா
கொடையேறு சேவற் கொடிகொண்டமுருகா
கடையேமைக் காக்கும் கதிரேச முருகா

மறைரூப மான வடிவான முருகா
குறவள்ளி குஞ்சரி மணவாள முருகா
நறையோடு தினைமாவை நயந்துண்ட முருகா
நிறைவான கல்வி நிதிகாட்டும் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கார முருகா அதிகார முருகா
கலங்காத சூரரைக் கலக்கிய முருகா
நலங்காணும் வீட்டில் நமைஏற்றும் முருகா
தலந்தோறும் இன்பம் தரும் செல்வ முருகா

வேலேந்து மாதி மெய்ஞ்ஞான முருகா
கோலேந்து மாண்டிக் குணசீல முருகா
மாலேந்தும் மருகா மலைவாழும் முருகா
காலேந்தி யாடும் கைலேசன் முருகா

# சொல்லச் சொல்ல வாயூறும்

**இராகம்: கரகரப்பிரியா** **தாளம்: ஆதி**

முருகா முருகா முருகா என்று சொல்லச் சொல்ல வாயூறும்
முருகா முருகா முருகா என்றால் ஆன்மாசோதி வீடேறும்
உருகாமனமும் உருகி உருகி ஓங்காரத்தின் ஒளி காணும்
பெருகாவிழிநீர் பெருகிப்பெருகி பேரானந்த நிலைபூணும் (மு)

கூடும்தெய்வ நாயகிவள்ளி குலவும் செல்வ மணவாளன்
குருவடிவாகிப் பிரணவவண்ணம் கூறியபரம சிவபாலன்
ஆடும்தோகை மயில் மேலேறி அழகிய வேலன் வந்திடுவான்
அடியார்வேண்டு மெல்லாவரமும் ஆறுமுகத்தான் தந்திடுவான் (மு)

ஐந்துகரத்தன் தம்பியெனச்சர வணமெனும் பொய்கை வந்துதித்தான்
ஆறுகுழந்தையு மோருருவாகி அம்பிகைதந்த வேல்பிடித்தான்
வெந்திடுசூரரை முந்தியழித்துயர் விண்ணுலகெல்லாம் காத்திட்டான்
வேதமொடாகம நீதிநிலைத்திடு மாறுபடைக்கிரிக் கூத்திதிட்டான்
(மு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரனைக்காத்திட நேரியகோலால் பூதத்தை வாட்டிக் கொன்றானே
கிழவியின்பாட்டை பரிவுடன் கேட்டு நாவல் மரத்தில் நின்றானே
பூரணமாம்பழம் வாங்குவதற்குப் புவனங்களெங்கும் சென்றானே
புகன்றிடுதமிழால் பொருதிடுசமணரை பொலி கழுவேற்றி வென்றானே
(மு)

சரவணபவகுரு நாதாகந்தா கதிர்வடிவேலா யுதனென்று
சந்ததம்கீதத் திருப்புகழ்பாடி சிந்தைகுவிந்தருகே நின்று
குரவொடுவாச மலர் மணிமாலை குவிந்தபக்தியொடு சூடி
குங்குமசந்தன தூபமும் தீபமும் ஏற்றிமகிழ்ந்து கூத்தாடி
(மு)

# ஞானப்பழம் நீ

*இராகம்: சிந்து பைரவி* *தாளம்: ஆதி*

ஞானப்பழம் நீ முருகா
நடமாடும் வேல் முருகா
கானம்வந்த சிலை முருகா
காதலித்த கிழ முருகா (ஞா)

கார்த்திகையார் பால் முருகா
கனை சிலம்புக் கால் முருகா
தீர்ப்புரைத்த நூல் முருகா
திருக்கரச் செங்கோல் முருகா (ஞா)

ஐந்தெழுத்துச் சிவ முருகா
ஆறெழுத்தின் ஒரு முருகா
தந்தி முகன் தம்பி முருகா
சங்கரனின் குரு முருகா (ஞா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதியின் மகன் முருகா
பகவன்மரு மகன் முருகா
போர்புரிந்த புகழ் முருகா
பொன் வயலூர் திகழ் முருகா (ஞா)

குறத்தி குஞ்சரி மகிழ் முருகா
குறுமுனிவர்க் கருள் முருகா
குறித்த ஞானம் தரு முருகா
கூவியழைக்க வரு முருகா (ஞா)

ஆதிவேதப் பொருள் முருகா
ஆனந்தத்தேன் அருள் முருகா
சோதியாது வா முருகா
துணையடிச்சுகம் தா முருகா (ஞா)

## சத்தி வடிவேல்

**இராகம்: தேஷ்** **தாளம்: ரூபகம்**

சத்திவடிவேல் சித்திவடிவேல்
சண்முக நாதன் வெற்றி வடிவேல்
பத்தி வடிவேல் முத்தி வடிவேல்
பன்னிரு கையன் சோதி வடிவேல் (ச)

ஆறுமுகங்களைக் கண்ணாற் பாருங்கள்
அவன் மலரடி பண்ணாற் பாடுங்கள்
ஏறு மயில்மேல் எம்முன் வருவான்
எண்ணிய தெல்லாம் உடனே தருவான் (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுர குலத்தை அழித்த குமாரன்
அமரரைக் காத்த சரவண வீரன்
பசுபதி போற்றும் குருபர நாதன்
பக்தரின் நெஞ்சில் நடமிடும் பாதன் (ச)

கார்த்திகைத் தாய்மார் பாலைக் குடித்தான்
கற்கி முகிதனை தாக்கி மடித்தான்
கீர்த்தி உரைக்கும் சேவல் பிடித்தான்
கிரிகளி லெல்லாம் ஏறி நடித்தான் (ச)

கலியுக வரதன் கவலைகள் தீர்ப்பான்
காணாத காட்சிக் கழலிணை சேர்ப்பான்
பலகலை ஞானப் பக்குவம் கூடும்
பவக்கடல் நீங்கும் பாழ்வினை ஓடும் (ச)

ஓம் முருகையா ஓம் முருகையா
ஓம் முருகாவென உள்ளம் நெகிழ்ந்தால்
ஓமெனும் சோதி ஒளி விளக்காகி
உடம்பு மனைக்குள் கடம்ப னிருப்பான் (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ வீரபத்திரசுவாமி

**சங்கரசிவ**

**இராகம்: மோகனம்** **தாளம்: ஆதி**

சங்கரசிவ ரூபஞான வீரபத்திரசுவாமி
சத்திபத்ர காளிபாக வீரபத்திரசுவாமி
எங்கும் நிறை பரமேஸ்வர வீரபத்திரசுவாமி
எங்களைக்காத் தருள்புரிவாய் வீரபத்திரசுவாமி

தேங்குசைவ நெறிவளர்த்தாய் வீரபத்திரசுவாமி
செவ்வாய்வாரக் கொலுவிருப்பாய் வீரபத்திரசுவாமி

ஓங்குமின்ப சோதிவண்ண வீரபத்திரசுவாமி
ஓங்காரத் துள்நடிப்பாய் வீரபத்திரசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆதிவேத வாகனனே | வீரபத்திரசுவாமி |
| அடியவரின் காவலனே | வீரபத்திரசுவாமி |
| நாதவிந்து நடமிடுவாய் | வீரபத்திரசுவாமி |
| நல்லவரின் நெஞ்சிருப்பாய் | வீரபத்திரசுவாமி |
| | |
| தக்கயாக பூசையிலே | வீரபத்திரசுவாமி |
| தலையறுத்துச் சமர்புரிந்தாய் | வீரபத்திரசுவாமி |
| மிக்ககருணைமழைபொழிந்தாய் | வீரபத்திரசுவாமி |
| வெள்ளாட்டுத்தலை கொடுத்தாய் | வீரபத்திரசுவாமி |
| | |
| சிவனிதயத் தெழுமகனே | வீரபத்திரசுவாமி |
| திரிசூலம் வாள்பிடித்தாய் | வீரபத்திரசுவாமி |
| சிவனையவ மதித்தவரை | வீரபத்திரசுவாமி |
| சிரபங்கம் செய்தாயே | வீரபத்திரசுவாமி |
| | |
| தேவர்களைச் சிறைவைத்தாய் | வீரபத்திரசுவாமி |
| திசையதிபர் கலங்கவைத்தாய் | வீரபத்திரசுவாமி |
| சீவர்களைக் காக்க வந்தாய் | வீரபத்திரசுவாமி |
| திருவடிக்கே சரண்புகுந்தோம் | வீரபத்திரசுவாமி |
| | |
| இடபத்திலே வீற்றிருப்பாய் | வீரபத்திரசுவாமி |
| இலிங்கபூசை நெறியுரைப்பாய் | வீரபத்திரசுவாமி |
| கொடியபவப் பிணியறுப்பாய் | வீரபத்திரசுவாமி |
| குறைவில்லா வாழ்வருள்வாய் | வீரபத்திரசுவாமி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரிகரபுத்திரர்

ஐயப்பா

**இராகம்: சிவரஞ்சனி** **தாளம்: ஆதி**

அரிகர புத்திர ஐயப்பா – உன்
அடியிணை தானே மெய்யப்பா
வருபுவி வாழ்க்கை பொய்யப்பா – உனை
மறவாத் திருவருள் செய்யப்பா (அ)

வான்சசி தேவி மனமேங்க – நீ
வந்தாய் அவள்முன் துயர் நீங்க
பான்மொழி பூரணை புட்கலையை –இரு
பாகத்தில் வைத்தாய் பரம்பொருளே (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலமின் மேனியும் செஞ்சடையும் - அருள்
நீள்கரத் தாயுதத் தொடுசெண்டும்
கோலம் படைத்த தவவடிவும் - புகழ்
கொண்டு பொலிந்தாய் உருத்திரனாய் (அ)

முனைவாள் வீரன் மாகாளன் - உடன்
முன்வரு காவற் படையுடையாய்
நினைவால் வாக்கால் காயத்தால் - நாம்
நிகழ்த்திய பிழைபொறுத் தருள்வாயே (அ)

மணிகண்ட னெனவே அவதரித்தாய் - எங்கும்
வரிப்புலி ஏறி வலம் வந்தாய்
அணிகொண்ட சபரி மலையினிலே - சரத்
தாலயம் அமர்ந்த பெருமானே (அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆஞ்சநேயசுவாமி

**இராகம்: மோகனம்** **தாளம்: ஆதி (திஸ்ரநடை)**

அன்பருக்குக் காவலனே ஆஞ்சநேயசுவாமி
அஞ்சனையின் புத்திரனே ஆஞ்சநேயசுவாமி
துன்பம் தீர்க்கத்துணைவருவாய் ஆஞ்சநேயசுவாமி
சோதிநிறச் சுந்தரனே ஆஞ்சநேயசுவாமி

மாருதியின் தவமகனே ஆஞ்சநேயசுவாமி
மார்கழியில் வந்துதித்தாய் ஆஞ்சநேயசுவாமி
வீரதண்டு கைப்பிடித்தாய் ஆஞ்சநேயசுவாமி
விறலரக்கர் குலமழித்தாய் ஆஞ்சநேயசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிராமன் தூதுவனே ஆஞ்சநேயசுவாமி
அசலமேந்தும் உருத்திரனே ஆஞ்சநேயசுவாமி
கீதம்பாடும் வேதியனே ஆஞ்சநேயசுவாமி
கேட்டவரம் தருபவனே ஆஞ்சநேயசுவாமி

சீதைவனம் சென்றவனே ஆஞ்சநேயசுவாமி
திகழிலங்கை எரியவைத்தாய் ஆஞ்சநேயசுவாமி
ஓதக்கடல் அணைகட்டினாய் ஆஞ்சநேயசுவாமி
உற்றபோரின் வெற்றிகண்டாய் ஆஞ்சநேயசுவாமி

நினைத்தவடி வெடுக்கவல்லாய் ஆஞ்சநேயசுவாமி
நீள்செவியில் குண்டலத்தாய் ஆஞ்சநேயசுவாமி
மனத்துராம பூசைசெய்வாய் ஆஞ்சநேயசுவாமி
வளர்தரும நெறியுரைப்பாய் ஆஞ்சநேயசுவாமி

சிரஞ்சீவி வாழ்வுடையாய் ஆஞ்சநேயசுவாமி
திருத்தொண்டர்க்கருள் புரிவாய் ஆஞ்சநேயசுவாமி
கரங்கூப்பிக் கைதொழுதோம் ஆஞ்சநேயசுவாமி
கண்ணோக்கிக் காத்திடுவாய் ஆஞ்சநேயசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமெல்லாம்

**இராகம்: மோகனம்** **தாளம்: ஆதி**

ஆலய மெல்லாம் கூட்டிடுவோம்
அணியணி யாய்விளக் கேற்றிடுவோம்
கோலத் தோரணம் போட்டிடுவோம்
குளிர்நீர் எங்கணும் தெளித்திடுவோம்

தேடித் தேடிப் பூவெடுத்து
சிறந்த மாலை பலதொடுத்து
ஆடும் சிவனுக் கணிந்திடுவோம்
அரகர சிவஎனப் பணிந்திடுவோம்

பழம்பால் தேங்காய் முன்வைத்து
பஜனை பாடிக் கைகுவித்து
மழவிடை யோனைக் கும்பிடுவோம்
வலம்வந்து திருவடி நினைந்திடுவோம்

திருவெண் ணீறு தரித்திடுவோம்
தீர்த்தமும் வாங்கிக் குடித்திடுவோம்
மருமலர் சந்தனம் வாங்கிடுவோம்
வாழ்வினில் ஆனந்தம் ஓங்கிடுவோம்

(ஆ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரியனே

இராகம்: பூபாளம் தாளம்: ஆதி

சூரியனே சூரியனே
சோதிதரும் சூரியனே
பாரினிலே வளம்பெருக
பலனுதவும் சூரியனே

வேதியர்கள் பாட்டிசைக்க
விண்ணில்வரும் சூரியனே
ஓதுகலை ஞானமெல்லாம்
உதவுகின்ற சூரியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிவரப் பயிர்செழிக்க
மன்னுயிர்கள் சுகம்பொலிய
சீருடைய தொழில்களெல்லாம்
சிறக்கவைக்கும் சூரியனே

ஏழ்பரியில் ஏறிடுவாய்
எவ்வுலகும் தோன்றிடுவாய்
வாழ்வுநலம் தந்திடுவாய்
வணங்கிடுவோம் வந்திடுவாய்

தாமரையின் நாயகனே
தத்துவனே உத்தமனே
ஓமயாக காரணனே
உளத்திருப்பாய் கதிரவனே

# பாப்பா வாவா

*தாளம்: ஆதி*

பாப்பா வாவா பாடுவோம்
பஜனை பாடி ஆடுவோம்
காப்பாள் எம்மைச் சிவசக்தி
கருத்தில் அருள்வாள் பயபக்தி (பா)

நல்ல நல்ல மலர் கொய்து
மெல்லிய நாரினி லே தொடுத்து
அம்பிகை கழுத்தில் சாத்திடுவோம்
நம்பியெந்நாளும் தோத்தரிப்போம் (பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் செல்வமும் தந்திடுவாள்
கருதி யழைத்தால் வந்திடுவாள்
சொல்வளம் சுகநலம் பெற்றிடலாம்
சுதந்திர வாழ்வைப் பற்றிடலாம் (பா)

காலையும் மாலையும் அலகிட்டு
கமழும் தூபப் புகையிட்டு
கோலச் சோதி விளக்கிட்டு
கோயிலைச் சுற்றி வலமிட்டு (பா)

நீறு வாங்கி நெற்றியிலே
நிறைவாய்ப் பூச மனங்குளிரும்
காரிய மெல்லாம் கைகூடும்
கவலைகள் எல்லாம் விரைந்தோடும் (பா)

# துளசியம்மா

*இராகம்: கரகரப்பிரியா* *தாளம்: (ஆதி திஸ்ரநடை)*

திருமகனின் பெருவடிவே துளசியம்மா
செல்வமெல்லாம் நீதருவாய் துளசியம்மா
திருமாலின் மார்பினிலே துளசியம்மா
சிறப்பாக வீற்றிருப்பாய் துளசியம்மா

பணிவாரின் பிணியறுப்பாய் துளசியம்மா
பலநோய்கள் தீர்த்திடுவாய் துளசியம்மா
அணியேறு கலையருள்வாய் துளசியம்மா
அகம்பொலிந்த சுகந்தருவாய் துளசியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகதுயர் நீக்கிடுவாய் துளசியம்மா
கேடில்லா வாழ்வருள்வாய் துளசியம்மா
பரவுதவ நெறியருள்வாய் துளசியம்மா
பழிநீக்கிப் பவமறுப்பாய் துளசியம்மா

கும்பிடுவார் நெஞ்சினிலே துளசியம்மா
கொடைமகளாய்க் குடியிருப்பாய் துளசியம்மா
இம்பரிலும் உம்பரிலும் துளசியம்மா
எண்ணியபே றளித்திடுவாய் துளசியம்மா

காலையிலும் மாலையிலும் துளசியம்மா
கைதொழுவார் இடரறுப்பாய் துளசியம்மா
சீலமிகு சந்தானம் துளசியம்மா
சீர்பெறவே தந்திடுவாய் துளசியம்மா

மாறாத ஊழ்வினையை துளசியம்மா
மாற்றிநலம் பெற அருள்வாய் துளசியம்மா
பேறான ஞானமெலாம் துளசியம்மா
பெற்றிடநீ துணைபுரிவாய் துளசியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைரவமூர்த்தி

இராசம்: மத்தியமாவதி தாளம்: ஆதி

வேதத்தின் காவலனே வைரவமூர்த்தி
மிளிர்யாக நாயகனே வைரவமூர்த்தி

பூதத்தின் முன்முதலே வைரவமூர்த்தி
பொலிசூல நாயகனே வைரவமூர்த்தி

வருவினைகள் தீர்ப்பவனே வைரவமூர்த்தி
மாகாளி பங்கினனே வைரவமூர்த்தி

அருவுருவ மானவனே வைரவமூர்த்தி
ஆகமத்தின் வடிவோனே வைரவமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருஞ்சுணங்க வாகனனே வைரவமூர்த்தி
வலிமையெலாம் கொண்டவனே வைரவமூர்த்தி
பெருஞ்சுகங்கள் தருபவனே வைரவமூர்த்தி
பிழைபொறுத்துக் காத்தருள்வாய் வைரவமூர்த்தி

எண்ணுகின்ற வடிவோனே வைரவமூர்த்தி
எமைக்காக்கும் பெருமானே வைரவமூர்த்தி
வண்ணக்காளி நாயகனே வைரவமூர்த்தி
மயானத்தில் நடமிடுவாய் வைரவமூர்த்தி

எத்திசையும் நீயிருப்பாய் வைரவமூர்த்தி
எவ்வுயிர்க்கும் காவலன் நீ வைரவமூர்த்தி
பக்தர்பிழை பொறுத்திடுவாய் வைரவமூர்த்தி
பாவமெலாம் அறுத்திடுவாய் வைரவமூர்த்தி

உயிர்க்குயிராய்த் துணைவருவாய் வைரவமூர்த்தி
உணரவொண்ணாப்பெருமான் நீ வைரவமூர்த்தி
மயக்கவினை தீர்த்திடுவாய் வைரவமூர்த்தி
மலரடியிற் சேர்த்திடுவாய் வைரவமூர்த்தி

## சூலமாநாயகன்

**இராகம்: மத்தியமாவதி** **தாளம்: ஏகம், கண்டநடை**

சூலமா நாயகன் வைரவப்பெருமான்
துட்டரை அழிப்பவன் வைரவப்பெருமான்
காலனின் காலனே வைரவப்பெருமான்
கருவினை ஒழிப்பவன் வைரவப்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளித்தா யுடனே வைரவப்பெருமான்
களிநடம் புரிவான் வைரவப்பெருமான்
சூழுலக மெல்லாம் வைரவப்பெருமான்
துணைநின் றாள்வான் வைரவப்பெருமான்

வேள்வியின் நாயகன் வைரவப்பெருமான்
வேதத்து நாயகன் வைரவப்பெருமான்
கோள்களை விதிப்பவன் வைரவப்பெருமான்
குலவிடும் ஆகமன் வைரவப்பெருமான்

உடுக்கிசைப் பிரியனார் வைரவப்பெருமான்
ஒளிர்பர சுடையவன் வைரவப்பெருமான்
கடுத்திடு நடமிடும் வைரவப்பெருமான்
கபாலமொன்றுடையவன் வைரவப்பெருமான்

பற்பல வடிவினன் வைரவப்பெருமான்
பக்தரைக் காப்பவன் வைரவப்பெருமான்
சொற்பதங் கடந்தவன் வைரவப்பெருமான்
சுதந்திரக் கடவுளே வைரவப்பெருமான்

நெய்வடை பாயாசம் பல்வகை அமுது
நினைந்து படைத்தோம் நின்னடி தொழுது
ஐயனே எங்கணும் உன்குடியிருப்பு
அடைக்கலம் உனக்கே காப்பதுன் பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

ஐங்கரக் கணேசனுக்கு மங்களம் மங்களம்
அம்பலத்து நாதனுக்கு மங்களம் மங்களம்
சங்கரி மனோன் மணிக்கு மங்களம் மங்களம்
தமிழழகர் முருகனுக்கு மங்களம் மங்களம்

நாகவரத நாரணனற்கு மங்களம் மங்களம்
நளினமாது இலட்சுமிக்கு மங்களம் மங்களம்
போகபுவன பூரணிக்கு மங்களம் மங்களம்
புனிதவீணை வாணித்தாய்க்கு மங்களம் மங்களம்

ஆதிவீரப்த்திரர்க்கு மங்களம் மங்களம்
அரிகரஜ யப்பனுக்கு மங்களம் மங்களம்
சோதிசடா வைரவர்க்கு மங்களம் மங்களம்
துரியநந்தி சண்டேசற்கு மங்களம் மங்களம்

கருணை ஆஞ்ச நேயருக்கு மங்களம் மங்களம்
சருடனுக்கும் நாகருக்கும் மங்களம் மங்களம்
இரவி திங்கள் செவ்வாய் புதன் குருவெள்ளி சனீஸ்வரன்
இராகு கேது திசையதிபர் யாவருக்கும் மங்களம்

அகிலசரா சரங்களுக்கும் மங்களம் மங்களம்
அன்படியார் அனைவருக்கும் மங்களம் மங்களம்.
சகல தெய்வத் தொண்டருக்கும் மங்களம் மங்களம்
சமய நீதி நூல்களுக்கு மங்களம் மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதிப்பு: கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2717,4590123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org